# ஆரம்பமும் அடிப்படைகளும்


| | பக்கங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. மனந்திரும்புங்கள் | - 10 | 1 |
| 2. இரட்சிப்பு | - 8 | 11 |
| 3. இரட்சிக்கப்பட்டவர்களின் ஆசீர்வாதங்கள் பொறுப்புகள் | - 10 | 19 |
| 4. விசுவாசி வளர | - 10 | 29 |
| 5. ஞானஸ்நானம் | - 12 | 39 |
| 6. சீஷத்துவம் | - 6 | 51 |
| | - 2 | 57 |

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மக்களுக்கு அருளின அருளுரைகளின் முக்கியமான ஓர் கருத்து **'மனந்திரும்புங்கள்'** என்பதாகும். மனிதன் இறைவனோடு கொள்ளக் கூடிய நெருக்கமான ஆன்மீக உறவின் முதல்படி தான் **'மனந்திரும்புதல்'**.

மனந்திரும்புதல் என்ற அனுபவத்தில் பாவத்தைக் குறித்த துக்கமும், பரிசுத்த வாழ்க்கைக்கான திருப்பமும், தீர்மானமும் இறைவனைப் பற்றிய தனிப்பட்ட அனுபவப்பூர்வமான அறிவும் அடங்கி உள்ளன. இந்த ஆரம்ப அனுபவம் இரட்சிக்கப்படுதல், மறுபடியும் பிறத்தல், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல் என்று பல்வேறு விதமாக அழைக்கப் படுகிறது. இது ஒவ்வொன்றும் இந்த அனுபவத்தின் வெவ்வேறு அம்சங்களை தெளிவுபடுத்துகிறது. நீங்கள் மனந்திரும்பி இருக்கிறீர்களா?

**மனந்திரும்புங்கள்!**

கீழ்க்காணும் தலைப்புகளில் நீங்கள் ஆராயலாம்....

**மனந்திரும்புதல் புதிய வாழ்க்கையின் ஆரம்பம்!**

**மனந்திரும்புதலைப் பற்றி பரிசுத்த வேதாகமம் சொல்வது என்ன?**

**மனந்திரும்புதல் என்ற அனுபவம்!**
துக்கம், தீர்மானம் , மனமாற்றம்

**மனந்திரும்புதலில் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**
பாவ அறிக்கை , விட்டுவிடுதல்
எச்சரிப்பு
ஒப்புரவாகுதல் : ஈடுசெய்தல்

**மனந்திரும்புகிறவர்களுக்கு கிடைப்பது என்ன?**
புதிய உறவு , பாவமன்னிப்பு
புதிய தன்மை , சந்தோஷம்

**மனந்திரும்புதலைப் பற்றிய வேத வசனங்கள்**

**மனந்திரும்புதல் : சிந்திக்க சில கேள்விகள்**

**மனந்திரும்புங்கள்!**

பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகக் கடவுள் மனிதனுடன் பேசுகிறார். வேதத்திலுள்ள அநேக முக்கியமான வார்த்தைகளில் 'மனந்திரும்புங்கள்' என்ற வார்த்தை ஒரு சிறப்பான வார்த்தையாகும். இவ்வார்த்தையில் அதிகாரப்பூர்வமான அழைப்பின் சத்தம் தொனிக்கிறது. மனந்திரும்புங்கள் அல்லது மனந்திரும்புதல் என்ற வார்த்தைகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த வார்த்தைகளின் கருத்து உங்களுக்குத் தெரியுமா?

பொதுவாக, தவறான அல்லது முறைகேடான வழிகளில் வாழும் ஒருவனைக் கடிந்துகொண்டு அறிவுரை சொல்லும்போது திருத்திக்கொள் அல்லது திருந்திக்கொள் என்று சொல்வோம் அல்லவா? தவறான திசையை விட்டு சரியான திசைக்கு நேராகத் திரும்பவேண்டும். தேவையில்லாதவற்றை விட்டுவிட வேண்டும். மனந்திரும்புதல் என்ற ஆன்மீக அனுபவத்தில் இவைகளெல்லாம் இடம்பெறுகின்றன.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். - இயேசு கிறிஸ்து

சென்னை மாநகரத்தில் உள்ள சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து இரவு 10 மணிக்கு ஒரு அதிவிரைவு வண்டி புறப்பட்டது. குமரி முனைக்குச் செல்ல விரும்பின ஒருவன் அதில் ஏறினான்.

காலையில் எழுந்த அவன் தெற்குத் திசையில் செல்ல வேண்டிய தான் தவறான ரயிலில் ஏறியதால் வடக்கேயுள்ள ஆந்திர மாநிலத்தில் பயணம் செய்து கொண்டிருப்பதாக உணர்ந்தான்.

**அவன் செய்ய வேண்டியது என்ன?** தான் வந்த திசை தவறானது என உணர்ந்து, வருந்தி உடனடியாகப் போய்க்கொண்டிருந்த வண்டியை விட்டு இறங்கி மறுபடியும் தெற்குத்திசையில் செல்லக்கூடிய ரயிலில் பயணம் செய்ய வேண்டும். இதைப்போல வாழ்க்கையில் நடக்கும் ஓர் ஆன்மீக அனுபவம் தான் மனந்திரும்புதல். மக்கள் எல்லாரும் பொதுவாக இறைவனுக்கு எதிர்த் திசையில் செல்லும் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சரியான வழிக்குத் திரும்ப வேண்டும் என்று கடவுள் பல வழிகளில் பேசுகிறார்; எச்சரிக்கிறார். இதுவே மனந்திரும்புதலில் நடக்கும் திருப்பம்.

## மனந்திரும்புதல்! புதிய வாழ்க்கையின் ஆரம்பம்!

நான் போகும் வழி சரிதானா? சரியான திசைக்குத் திரும்ப நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள்!

எல்லா மக்களையும், 'மனந்திரும்புங்கள்' என்று தேவன் அழைக்கிறார். தவறான வழிகளில் செல்பவர்களுக்கு 'மனந் திரும்புங்கள்' என்று அழைப்பு கொடுப்பது சரியாகத் தோன்றுகிறது. ஆனால் யாருக்கும் எந்தத் தீங்கும் நினையாத, செய்யாத, நேர்மையாக, நல்லவர்களாக வாழ்பவரும் மனந்திரும்ப வேண்டுமா என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம். ஆம், எல்லோரும் மனந்திரும்ப வேண்டும். மனிதர் எல்லோருமே இறைவனுடைய பார்வையில் அவருடைய எதிர்பார்ப்பின்படி வாழத் தவறியிருப்பதால் எல்லோருமே மனந்திரும்புவது அவசியம்.



## மனந்திரும்புதலைப் பற்றி பரிசுத்த வேதாகமம் சொல்வது என்ன?

'எங்குமுள்ள எல்லா மனிதரும் மனந்திரும்ப வேண்டும்' என்று தேவன் கட்டளையிடுகிறார். ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி அவர் நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானன் என்பவர். 'மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. மனந்திரும்புதலுக் கேற்ற கனிகளைக் கொடுங்கள்' என்று போதித்தார். மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, 'நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்' என்று எச்சரித்தார்.

பழங்காலத்தில் மனிதன் பாவம் செய்த போது அதற்காகப் பலி செலுத்தினான். ஆனால் மீண்டும் மீண்டும் பாவம் செய்தான். மனந்திரும்புதலோ, பாவம் செய்யாமலிருக்க மனிதன் பாவத்தை விட்டு பரிசுத்த தெய்வத்திடம் திரும்புவதாகும்.

*II* பேதுரு 3 : 9; மத்தேயு 4 : 17; மத்தேயு 3 : 8; லூக்கா 13 :3,5

இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு உரிய சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ளும் படியாக நீங்கள் இருளை விட்டுதேவனி டத்திற்குத் திரும்புவதே மனந்திரும்புதல்.

'உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு மனந்திரும்பி குணப்படுங்கள்' என்றும் (அப்போ 3 : 20) 'நீங்கள் தெய்வத்திடம் மனந்திரும்பி, வாழ்க்கை சீர்திருந்தி,மனந்திரும்புதலுக் கேற்ற நற்செயல்களைச் செய்யவும் வேண்டும்' என்றும் ஆண்டவராகிய இயேசுவின் சீடர்கள் போதித்தார்கள்.

இப்படி பரிசுத்த வேதாகமத்தில் மனந்திரும்புதலைக் குறித்து 100 தடவைகளுக்கும் மேலாகப் படிக்கிறோம். நீங்கள் மனந்திரும்ப வேண்டுமென்பதே என்னுடைய ஜெபமும் விருப்பமுமாய் இருக்கிறது.

மனந்திரும்புதல் என்ற அனுபவத்தில் கீழ்க்காணும் **4 முக்கியமான** அம்சங்கள் உண்டு.

*(1)* பாவத்தைப் பற்றிய துக்கமான உணர்வு!

*(2)* மனதில் ஏற்படும் ஒரு புதிய தெளிவு!

*(3)* பரிசுத்த வாழ்வு வாழ உறுதியான தீர்மானம்!

*(4)* வாழ்வில் ஏற்படும் ஓர் அற்புதமான திருப்பம்!

### மனந்திரும்புதல் என்ற அனுபவம்!

'மனந்திரும்புதல்' என்ற வார்த்தை ஆழமான துக்கத்தையும், வருத்தத்தையும், உள்ளம் உடைதலையும், மனஸ்தாபத்தையும் காண்பிக்கிறது. 'பாவம் செய்து விட்டேன்' என்று பாவத்திற்குரிய விளைவைக் குறித்தும், தண்டனையைக் குறித்தும் பயத்தினால் உண்டாகும் வருத்தம் அல்ல. கொடிய தீயப்பழக்கம் கொண்டவர்கள் கூட ஒரு தீய காரியத்தைச் செய்த பிறகு மனம் வருந்துகின்றனர். ஆனால் மனந்திரும்புதல் என்பது வேறொரு விதமான துக்கமாகும்.

பாவத்தினால் கடவுளை விட்டுப் பிரிந்தவனாக வாழ்கிறேன்! தேவனின் பரிசுத்தத்திற்கும், அன்பிற்கும் விரோதமாக அல்லவா பாவங்கள் செய்திருக்கிறேன்; எத்தனை கொடிய பாவச் செயல்களை நான் தொடர்ந்து, துணிந்து செய்திருக்கிறேன்! என்று தெய்வீக துக்கத்தால் மனம் வருந்தி, உள்ளம் உடையும் போதே மனந்திரும்புதல் ஆரம்பமாகிறது. தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, கண்ணீரோடு **'தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்!'** என்று திரும்புவதே மனந்திரும்புதல் ஆகும்.

### மனந்திரும்புதல் : துக்கம்

அப்படியே ஒவ்வொருவருக்கும் மனந்திரும்புதலின் முதல் படியில் மனஸ்தாபமும், துக்கமும் உண்டாக வேண்டும். இந்த உணர்வைப் பெற்று இயேசு கிறிஸ்துவை நோக்கும்போது பாவத்தை விட்டு விலக முடிகிறது. ஒருவன் மனந்திரும்பும் போது அவனுடைய கடினமான இருதயம் நொறுங்குகிறது. திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமான இருதயம் சீராகிறது; குணமடைகிறது.

மனந்திரும்புதல் என்பது ஓர் உணர்ச்சி மட்டுமல்ல; இது மனதில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். தெய்வம், பாவம், சுயம், உலகம் என்பவைகளைக் குறித்து மனிதன் குறுகிய தவறான அபிப்பிராயமும், எண்ணமும் கொண்டு இருக்கிறான். ஆனால் இவைகளைக் குறித்த பரிசுத்த வேதாகமத்தின் சத்தியங்களைச் சரியான முறையில் தெரிந்து கொள்ளும் போது அவன் ஒரு புதிய தெளிவைப் பெறுகிறான். பாவத்தின் பயங்கரத்தையும், சுயத்தின் கொடூரத்தையும், உலகத்தின்மாயமான, நிலையற்ற தன்மையையும் தெய்வத்தின் அன்பையும், பரிசுத்தத்தையும், நீதியையும் ஒருவன் விளங்கிக்கொள்ளும் போது... அது அவனுடைய முழு வாழ்வையும் பாதிக்கிறது; மாற்றுகிறது.

### மனந்திரும்புதல் : தீர்மானம்

உள்ளான உணர்வும், புதிய மனத் தெளிவோடும் கூட உறுதியான தீர்மானமும் எடுக்கப்பட வேண்டும். பாவத்தை வெறுக்கவும், விட்டு விடவும், தொடர்ந்து இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் செய்யும் உறுதியான தீர்மானம் மனந்திரும்புதலின் முக்கியமான அம்சமாகும்.

'இனிமேல் பழைய தவறான வழிகளில் நான் செல்லமாட்டேன். என்னுடைய பழைய பாவப் பழக்க வழக்கங்களை நான் ஒழித்து விட்டேன். ஆண்டவர் விரும்பாத தொடர்புகளை, நண்பர்களை விட்டு விடுவேன்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் ஒழுங்காக நேரம் செலவிடுவேன்'என்ற வகையில் உறுதியான தீர்மானம் செய்ய வேண்டும்.

உறுதியான தீர்மானத்தைத் தொடர்ந்து மனந்திரும்புகிறவனுடைய வாழ்க்கையில் ஒரு திட்டவட்டமான மாறுதல் ஏற்படுகிறது. தெய்வீக செயல்பாட்டினால், உருவாகும் உள்ளான இந்தத் திருப்பத்தினால் நடை, உடை, பாவனை, பேச்சு வார்த்தை போன்ற நடைமுறை வாழ்க்கையில் ஒரு மாற்றம் காணப்படுகிறது.

### மனந்திரும்புதல் : மனமாற்றம்

இந்த அற்புதமான மனந்திரும்புதலின் காரணமாக ஏற்படும் குணமாற்றம் தொடர்ந்து வளர்ச்சி பெறவேண்டும். இந்த மாற்றத்தினால் வாழ்க்கையின் நோக்கும், போக்கும் இயேசு கிறிஸ்துவை நோக்கித் திரும்புகிறது. ஒருவன் மீண்டும் மீண்டும் மனந்திரும்புவதில்லை. *அந்தப்படி, முந்தின நடக்கைக் குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ள வர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.*
(புதிய ஏற்பாட்டில் பக்கம் 267, எபேசியர் 4 :22 - 24)

ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனக்காக உலகத்திற்கு வந்ததையும், அவர் சிலுவை மரத்திலே தன் பாவத்திற்கான பிராயச்சித்தத்தை செய்து முடித்ததையும் சரீரக்கண்களால் பார்க்காவிட்டாலும் அவரைக் குறித்து வேதவசனம் சொல்லுகிறதை விசுவாசிக்கிறதின் (நம்புகிறதின்) காரணமாக அவனை **'விசுவாசி'** என அழைக்கலாம். இதை மதமாற்றம் என்று சொல்லுவதை விட மனமாற்றம் என்று சொல்லுவதே பொருந்தும்.

### மனந்திரும்புதலில் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

மனந்திரும்புதலுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் என்னிடத்தில் கேட்கலாம். நான் நல்லவிதமாக சரியாக வாழ வேண்டும் என்ற விருப்பம் நல்லது தான். ஆனால் அந்த விருப்பத்தை சொந்த பலத்தில் நாம் சாதித்துவிட முடியாது. *பொறுமையும், நீடிய சாந்தமும் கொண்ட தேவனுடைய தயவு நீ குணப்படும்படி ஏவுகிறதென்றும், தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளுகிறார்* (ரோமர் 2:5) என்றும் தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. தேவனுடைய பெரிதான கிருபையினால் பரிசுத்த ஆவியானவர் செயல்படுவதன் மூலம் வேதவசனத்தின் வெளிச்சத்தில் ஒருவன் தன்னுடைய ஆவிக்குரிய விழுந்துபோன நிலையை உணரும் போதே மனந்திரும்புதல் ஆரம்பமாகிறது.

மனந்திரும்புகிறவன் முதலாவது *'நான் ஒரு பாவி'* என்று உணர்ந்து ஒத்துக் கொள்ள வேண்டும். லூக்கா 15:11-32, புதிய ஏற்பாட்டில் 106ஆம் பக்கத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன ஓர் அழகான கதையில் இது தெளிவாக இருக்கிறது.

ஒரு தகப்பனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இளையவன் துடுக்கானவன். சொத்தில் ஒரு பங்கை கேட்டு வாங்கினான். தூர தேசத்திற்குப் போய் தன் இஷ்டம் போல் வாழ்ந்து மகிழ்ந்தான். அவனிடம் இருந்த பணம் குறைந்தபோது நண்பர்கள் நழுவினர்.

வாழ வழியின்றி பன்றிப்பண்ணை வைத்திருந்த ஒருவரிடம் கூலிக்கு அமர்ந்தான். அவைகளுக்கு வைக்கப்படும் தவிட்டினால் தன் பசியை ஆற்ற முயன்றான். அதுவும் கிடைக்கவில்லை. அப்பொழுது அவனுக்கு புத்தி வந்தது. தன் தகப்பன் வீட்டில் உள்ள கூலிக்காரன்கூட தன்னை விட நல்ல நிலையில் இருக்கிறானே! என ஏங்கினான்.



தன் நிலையைக் குறித்து வருந்தி, யோசனை பண்ணி 'நான் மறுபடியும் என் தகப்பனிடம் சென்று மன்னிப்புக் கேட்டு உமது கூலிக்காரரில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும் என்பேன்' என தீர்மானித்தான். வீட்டை நோக்கி நடந்தான். இதுதான் சரியான திசைக்கு நேராகத் திரும்புதல். மனந்திரும்புதலில் ஒரு முக்கியமான ஆரம்பம்.

அவன் தகப்பனோ அவன் எப்பொழுது வருவான் என்று காத்துக்கொண்டே இருந்தான். தூரத்தில் அவனைப் பார்த்தவுடனே ஓடிப்போய் அவனைக் கட்டித்தழுவி அணைத்துக் கொள்கிறார். திரும்பி வந்த இளையமகன், *தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்* என்று உள்ளான உணர்வோடு அறிக்கை யிடுகிறான். தகப்பன் அவனை ஏற்றுக் கொள்கிறார். புதிய ஆடையையும், மோதிரத்தையும் அணிவித்து விருந்து செய்து மகிழ்கிறார். மகன் ஓர் புதிய வாழ்வை ஆரம்பிக்கிறான்.

சரியாய் மனந்திரும்பும் ஒருவன் தேவனிடத்தில் ஒவ்வொரு பாவச் செயலையும் அறிக்கையிடுகிறான். என்னுடைய ஒவ்வொரு பாவச்செயலுக்கும் நானே முழுப்பொறுப்பாளி என ஒத்துக் கொண்டு, தன் துணிகரத்தையும் தேவனிடம் துக்கத்தோடு சொல்லி மன்னிப்புக் கேட்பது தான் **பாவ அறிக்கை.**

### மனந்திரும்புவதில் 4 படிகள்...

1 பாவியென்று ஒத்துக்கொள்ளுதல்
2 பாவங்களை அறிக்கையிடுதல்
3 பாவச் செயல்களை விட்டு விடுதல்
4 ஒப்புரவாகுதல் - ஈடு செய்தல்



### மனந்திரும்புதல் : பாவ அறிக்கை

தகப்பனை விட்டுத் தூரம்போய் துன்மார்க்கமாய் வாழ்ந்த இளைய மகன் தன் நிலையை உணர்ந்து, எழுந்து புறப்பட்டு மீண்டும் வந்து வருந்தி மன்னிப்புக் கோரினதைப் போல் நாமும் நம்முடைய பரம தகப்பனிடம் திரும்பிவர வேண்டும். நீங்களும்...

தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.

*என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவங்கள் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங் கானதை நடப்பித்தேன்.*

*நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்* என்று நீங்கள் ஜெபியுங்கள். லூக்கா 18:13; சங்கீதம் 51:3,4

### மனந்திரும்புதல் : விட்டுவிடுதல்

*தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ் வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதிமொழிகள் 28:13)* ஒத்துக் கொண்டு அறிக்கையிடுகிறது மட்டும் அல்ல, பழைய பாவ பழக்கவழக்கங்களை விட்டுவிட வேண்டும். மனந்திரும்பும் போது பாவத்தைப் பற்றிய வெறுப்பு நமக்குள் உண்டாகி, பரிசுத்தத்தைப் பற்றிய விருப்பம் நமக்குள் உருவாகிறது.

இந்த புதிய தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்; வளர்த்துக் கொள்ள வேண்டும். பாவப்பழக்கங்களை ஒழித்து விடுதலும், பாவத்திற்குக் காரணமான சூழ்நிலைகளை வெறுத்து விடுதலும் மிகவும் அவசியம். பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்; கடைப்பிடிக்க வேண்டும்.

இவைகளெல்லாம் உண்மையான மனந்திரும்புதலுக்கு முக்கியமான அடையாளங்களாக இருக்கின்றன.

நீங்கள் ஒருவேளை மனந்திரும்புதலின் படிகளில் ஏறி வந்து கொண்டிருக்கலாம். சில பாவப்பழக்கங்களை விட்டுவிடுவது உங்களுக்கு முடியாதது போலத் தோன்றலாம்.

### மனந்திரும்புதல் : எச்சரிப்பு

தேவலோகத்தை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தான் ஒருவன். அவன் தோளின் மீது அவனது செல்லப்பிராணி தொத்திக்கொண்டு 'கீச், கீச்' என சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தது. அப்பொழுது தேவதூதன் ஒருவன் தோன்றி, 'இது இங்கு இருக்கக் கூடாது, இதைக்கொன்று எறிந்து விடு' என எச்சரித்தார். அவனோ சற்று நேரத்தில் அது தூங்கிவிடும் என சாக்குபோக்கு கூறினான். சிறிதுநேரம் கழித்து மறுபடியும் 'கீச்,கீச்' என்ற சத்தம் எழும்ப, தூதன் தான் கூறியதை அவனுக்கு நினைப் பூட்டினான்.

அவனது செல்லப்பிராணி தூதனைக் காட்டி, 'அவன் சொல்வதைக் கேட்காதே, நான் இல்லாவிட்டால் நீ வாழவே முடியாது' என அழுத்தமாகக் கூறினது. அதற்கு அவன் தூதனிடம், 'நாளைக்கு நீர் சொல்வதைச் செய்கிறேன்' என்றான். 'இன்றே இரட்சிப்பின் நாள், இன்றே செய்ய வேண்டும்' என்றான் தூதன். 'என் வைத்தியர் கருத்தைக் கேட்டு செய்கிறேன்' என்றான். அவன் செல்லப் பிராணியோ அவனிடம் 'தயவுசெய்து என்னை ஒன்றும் செய்து விடாதே' எனக் கெஞ்ச ஆரம்பித்தது.

தூதன், 'நீ இதை உயிரோடு வைத்தால் தேவலோகம் செல்ல முடியாது' என்றான். அப்படியென்றால், நீரே கொன்று விடும் என்றான்.

தேவதூதன் நான் கொல்ல முடியாது. நீ தான் கொல்ல வேண்டும் என துரிதப்படுத்தினான். அப்போது தூதன் சொல்லைக் கேட்ட அவன் தன் செல்லப் பிராணியைக் கொன்று தூக்கி எறிந்து விட்டான்.

இதைத் தன் கனவில் பார்த்துக் கொண்டிருந்த C.S. லூயிஸ் என்பவர் 'அவன் அவ்வாறு செய்த போது பலமுள்ள ஒரு பெரிய குதிரை தென்பட்டது. அவன் அதில் ஏறி பறந்து தேவலோகம் சென்றதைப் பார்த்தேன்' என்று அதனை முடிக்கிறார். 'நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிட்டு ஓட' நாம் அழைக்கப்படுகிறோம். (எபிரெயர் 12 : 1)

**நான் கொன்று எறிந்துவிட வேண்டிய என்னுடைய செல்லப் பிராணி எது?**

**நான் எதைக் களைந்து எறிய வேண்டும்?**

### விட்டுவிட்டால் என்ன நடக்கும்? பயம் வேண்டாம்!

மலை ஏறும் பழக்கத்தில் நாட்டம் உடைய ஒருவன் ஒரு செங்குத்தான மலையிலிருந்து தான் வைத்திருந்த நீண்ட கயிற்றின் வழியாக இறங்கிக் கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல... மாலைப்பொழுது மறைந்து திடீரென்று இருட்டி விட்டது. கீழே ஒன்றும் தெரியாத நிலையில் தான் கயிற்றின் எந்த முனையில் இருக்கிறேன் என்று அறியாது பயந்தான்.

பலநூறு அடிகளுக்கு மேல் இவ்வாறு அகப்பட்டுவிட்டேனே! என அங்கலாய்த் தான். 'கடவுளே காப்பாற்று' என அபய மிட்டான். அப்பொழுது மேலிருந்து 'நீ பிடித்துள்ள கயிற்றை விட்டுவிடு' என ஒரு சத்தம் வந்தது. அவனுக்கோ பயத்தில் விட்டுவிட மனதில்லை. குளிரில் விறைத்து மரித்தான். மறுநாள் பார்த்தபோது... அவன் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த இடத்திற்கும், தரைக்கும் இடையே ஒருசில அடிகளே இருந்தன என கண்டுபிடிக்கப் பட்டது.

**நான் பிடித்துள்ள கயிறு என்ன? வாழ்க்கையைப் பற்றி என் நம்பிக்கை என்ன?**

### கர்த்தர் தாங்குவார்! தப்புவிப்பார்!!

நான் பிடித்துள்ள கயிறு, நான் எனக்கு ஏற்படுத்திக்கொண்ட சொந்த நம்பிக்கையாய் இருக்கலாம். 'நான் நல்லவன்' என்று என்னைப் பற்றி கொண்டுள்ள தற் பெருமையாக இருக்கலாம். என்னை தன் பக்கமாக வசீகரித்துள்ள உறவின் பந்தமாக இருக்கலாம். கடவுளின் ஆசியையும், அருளையும் பெற நான் மனந்திரும்பி அவரை விசுவாசித்து அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நான் பிடித்துள்ள என் கயிற்றை விட்டு விட வேண்டும். ஆனால் அது நான் நினைப்பதைப் போல் கடினம் அல்ல. எளிது.

ஏன்? கடவுள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்காக, எனக்கு உதவ என் அருகாமையில் தான் இருக்கிறார். நான் தேடக்கூடிய நித்திய அழிவில்லாத சமாதானம், சந்தோஷம் என் அருகாமையில் தான் உள்ளது. நான் அதை தவறவிடக் கூடாது.

**விசுவாசம் என்பது...**

ஆண்டவரைப் பற்றிக் கொள்வது (நம்புவது) மட்டுமல்ல; தேவையற்ற காரியங்களை விட்டு விடுவதையும் குறிக்கும்.

**மனந்திரும்புதலைப் பற்றிய முக்கியமான வேத வசனங்கள்!**

| புத்தகம் | அதிகாரம் | வசனங்கள் | பு.ஏ.பக்கம் |
|---|---|---|---|
| மத்தேயு | 3 | 8 | 5 |
| மத்தேயு | 4 | 17 | 6 |
| மாற்கு | 1 | 4 | 47 |
| மாற்கு | 1 | 15 | 48 |
| மாற்கு | 6 | 12,13 | 55 |
| லூக்கா | 5 | 32 | 85 |
| லூக்கா | 13 | 3 | 102 |
| லூக்கா | 15 | 7 | 106 |
| லூக்கா | 22 | 32 | 118 |
| லூக்கா | 24 | 47 | 123 |
| அப்போஸ்தலர் | 2 | 38 | 163 |
| அப்போஸ்தலர் | 3 | 20 | 164 |

### ஒப்புரவாகுதல் : ஈடுசெய்தல்

தேவனிடத்தில் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டு, விட்டுவிடுவது மட்டுமல்ல. ஒப்புரவாகி, இழப்பை ஈடு செய்வதும், மிகவும் அவசியம். மற்றவர்களுக்கு விரோதமாய் செய்திருந்த, பேசியிருந்த தவறான காரியங்களுக்காக நேரடியாகச் சென்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு ஒப்புரவாக வேண்டும். முறித்துக் கொண்ட உறவை சீர்பொருந்தி, புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒப்புரவாகவும், நல்மனம் பொருந்தவும், சமாதானம் பண்ணவும் வேதாகமம் போதிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதை அதிகம் வலியுறுத்தினார். புதிய ஏற்பாட்டில் 7, 111 ஆம் பக்கங்களில் *மத்தேயு 5 : 23 - 26, லூக்கா 19 : 1- 10 வேதபகுதிகளை கருத்துடன் வாசித்துப் பாருங்கள்.*

பழைய பாவ வாழ்க்கை காரணமாக மற்றவர்களுக்கோ, ஸ்தாபனத்துக்கோ பொருள் நஷ்டத்தை விளைவித்திருந்தால் நஷ்டஈடு செய்வது மிகவும் சிறந்தது. ஒப்புரவாகுதலையும் நஷ்டஈடு செய்தலையும் குறித்து ஆண்டவராகிய இயேசு உங்கள் உள்ளத்தில் உணர்த்துவாரானால் அதை செய்வதற்கான தைரியத்தையும், வழிநடத்துதலையும், ஞானத்தையும் திட்டமாகக் கொடுத்தருள்வார்.

**மனந்திரும்புதலைப் பற்றிய முக்கியமான வேத வசனங்கள்!**

| புத்தகம் | அதிகாரம் | வசனங்கள் | பு.ஏ.பக்கம் |
|---|---|---|---|
| அப்போஸ்தலர் | 8 | 22 | 172 |
| அப்போஸ்தலர் | 11 | 18 | 178 |
| அப்போஸ்தலர் | 17 | 30 | 189 |
| அப்போஸ்தலர் | 20 | 21 | 193 |
| ரோமர் | 2 | 4 | 208 |
| IIகொரிந்தியர் | 7 | 10 | 250 |
| II பேதுரு | 3 | 9 | 324 |
| வெளி. விசேஷம் | 2 | 5 | 334 |

## மனந்திரும்புகிறவர்களுக்குக் கிடைப்பது என்ன?

மனிதன் எப்பொழுதும் ஏதாவது எதிர் பார்ப்புகளுடன் வாழ்கிறான். அது இயல்பானது தான். நான் மனந்திரும்ப விரும்புகிறேன்; எனக்கு என்ன கிடைக்கும் என்று ஒரு வேளை நீங்கள் என்னிடத்தில் கேட்கலாம். மனந்திரும்புகிறவன் தேவனிடத்திலிருந்து ஆன்மீகக் கிருபைகளைப் பெற்றுக்கொள்ளும் பக்குவத்தை அடைகிறான்.மனந்திரும்பு கிறவர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவைகளில் கீழ்க்காணும் **4 காரியங்களை**மட்டும் பார்ப்போம்!

1. **புதிய உறவு**
2. **பாவ மன்னிப்பு**
3. **புதிய தன்மை**
4. **சந்தோஷம்**

### 1. புதிய உறவு

மனந்திரும்பும் வரைக்கும் மனிதனுக்குக் கடவுளோடு சரியான தொடர்பு உண்டாக வழியில்லை. ஒரு வேளை கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக, பக்தி வைராக்கிய முள்ளவர்களாக, மதப்பற்றுள்ளவர்களாக பல மக்கள் வாழ்கிறார்கள். மனந்திரும்பும் போது தான் மனிதனுக்குத் தேவனோடு தனிப்பட்ட, நேரடியான உறவு ஏற்படுகின்றது.

ஒருவன் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர் என்று விசுவாசித்து, அவரைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது அவன் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறான். அவன் கிறிஸ்துவுக்குரியவன் என்பதினாலும், கிறிஸ்துவை உடையவன் என்பதினாலும் **'கிறிஸ்தவன்'** என்று அழைக்கப் படுகிறான். மனந்திரும்பும் ஒருவன் ஆண்டவராகியஇயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்கிறான். அப்படி ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு **தேவனுடைய பிள்ளைகள்** என்ற அதிகாரப்பூர்வமான தகுதியை தேவன் அளிக்கிறார். இந்தப் புதிய உறவின் உண்மையை யோவான் 1:12 *(புதிய ஏற்பாட்டில் பக்கம் 124)* இல் வாசிக்கிறோம்.

### 2. பாவமன்னிப்பு

பாவத்தன்மையோடு மனிதன் பிறந்திருப்பதால் பாவம் செய்துகொண்டே வாழ்கிறான். அவன் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதினால் தேவனிடத்திலிருந்து பாவ மன்னிப்பை பெறும் வரைக்கும் குற்ற உணர்வினால் வேதனைப்படுகிறான். மனந்திரும்புகிற வர்களைத் தேவன் மனப்பூர்வமாக மன்னிக்கிறார்.

மனந்திரும்புகிறவர்களுடைய பாவத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் கழுவி சுத்திகரிப்பதனால் அவர்களுக்கு பாவ மன்னிப்பின் நிச்சயம் கிடைக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கிறது. *(I யோவான் 1:7)* என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. பூமியிலே பாவங்களை மன்னிக்க இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டு. - மாற்கு 2 : 5, 10

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

- I யோவான் 1 : 9



## 3. புதிய தன்மை

தேவனின் கிருபையால் ஒருவருடைய வாழ்வில் ஏற்படும் மனந்திரும்புதலினால் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதை *'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின. (II கொரிந்தியர் 5 : 17)* என்று வேதத்தில் படிக்கிறோம்.

மனந்திரும்பும் ஒருவன் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறான். ஆனால் மீண்டும் மீண்டும் பாவம் செய்துவிட்டு ஒவ்வொரு முறையும் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணம் தவறானது ஆகும். உண்மையாகவே முற்றிலுமாய் மனந்திரும்பின ஒருவன் தெய்வத்தின் கிருபையால் பாவ சோதனைகளுக்கு இடம் கொடுக்காமல் பரிசுத்தமாக வாழ முடியும்.

தேவன் பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல. பரிசுத்தத்திற்கு ஏதுவான மாற்றத்தை மனிதனுக்குள் ஏற்படுத்துகிறார். மனந்திரும்புகிற ஒவ்வொருவரும் தேவனிடத்திலிருந்து புதிய தன்மையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தப் புதிய தன்மையின் காரணமாக மனந்திரும்பு கிறவர்களுக்குப் பரிசுத்தமாக வாழ பெலன் கிடைக்கிறது.

## 4. சந்தோஷம்

மனந்திரும்புகிறவர்களுக்கு உண்மையான சந்தோஷமும் நிலையான சமாதானமும் கிடைக்கிறது. உள்ளான நிம்மதியில்லாததால் மனிதன் சிற்றின்பத்தினால் திருப்தி காண முயற்சிக்கிறான். ஆனால் அவன் அந்த விதத்தில் சமாதானத்தைப் பெற முடியாது. மனந்திரும்புகிறவர்களுக்கோ நித்திய நம்பிக்கை பிறப்பதால் அவர்கள் மெய்யான சமாதானத்தையும் நிறைவான சந்தோஷத்தையும் பெற்று அனுபவிக்கிறார்கள்.

மனந்திரும்பும் ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கும் மறுபிறப்பின் பாக்கியத்தைப் பெற்றிருப்பது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்ற நிச்சயமும், விசுவாசிக்கு யாரும் கொடுக்க முடியாத, எந்த சூழ்நிலையும் எடுக்க முடியாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மரணத்திற்குப் பின்பும் என்றென்றும் ஆண்டவராகிய இயேசுவுடன் மோட்சத்தில் வாழ்வோம் என்ற நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. *...சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்.*

*(I பேதுரு 1 : 8, 9)*

## எனக்கு நிம்மதி தந்தவர் இயேசு! நிறைவாய் நடத்துகிறார்!

எனது பெயர் அப்துல் சமது என்ற அப்துல் ஆபிரகாம். நான் கன்னியாகுமரி மாவட்டம் வள்ளவிளை என்ற ஊரில் ஒரு இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தேன். என் பெற்றோருக்கு நாங்கள் 10 பிள்ளைகள். நான் எட்டாவது மகனாகப் பிறந்தேன்.

என் சிறு வயதில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டேன். மருந்துகள் பல சாப்பிட்டும் நாட்டு வைத்தியங்களை செய்தும், குறி கேட்பதும், இஸ்லாமிய நம்பிக்கைப்படி புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றும் சுகம் கிடைக்காத நிலையில் அம்பிளிக்கை கிறிஸ்தவ மருத்துவ மனையில் வேலைக்குச் சேர்ந்தேன். சிகரெட் புகைப்பது, சினிமா பார்ப்பது, அசுத்தமானகதைப் புத்தகங்கள் படிப்பது போன்ற பல தீமையான பாவங்களுக்கு அடிமையாயிருந்தேன். இதனால் மனதில் நிம்மதியைத் தேடி நாகூர் பள்ளிவாசல், வேளாங்கண்ணி, பழனி மலை போன்ற இடங்களுக்குச் சென்றேன்.

நான் தேடிச் சென்ற தெய்வங்கள் எனக்கு நிம்மதி தரவில்லை. வாழ்க்கையில் வெறுப்படைந்து இந்த உலகத்தில் கடவுள் இல்லையென்று மனதில் நினைத்தேன்.

தற்கொலை செய்து சாக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கும் போது ஒரு ஞாயிறு காலையில் தேவாலயத்தில் ஆராதனையின் செய்தி வேளையில் *'வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'* மத்தேயு 11 : 28 என்ற வசனத்தின் மூலம் தேவன் என்னோடு பேசினார். தொடர்ந்து பைபிளைப் படிக்கும் போது என் பாவங்களைக் குறித்து தேவன் உணர்த்தினார்.

ஒரு இரவு என் பாவங்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து மனம் திரும்பினேன். *'இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'* Iயோவான் 1:7 என்ற வசனத்தின் மூலம் தேவன் எனக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்தைக் கொடுத்தார். மனந்திரும்பிய நான் 17.7.79 அன்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன். நிம்மதி இல்லாமலிருந்த நான் இன்று மனைவி பிள்ளைகளுடன் சமாதானமாக இருக்கிறேன். இயேசுவுக்கு சாட்சியாக சுகமாக வாழ்ந்து வருகிறேன்.

### மனந்திரும்புதல் சிந்திக்க வேண்டிய சில கேள்விகள்!

ஒரு சில நிமிடங்களாவது செலவிட்டு ஒவ்வொரு கேள்விக்கான பதிலையும் கருத்துடன் யோசித்துப் பாருங்கள்.

- ☞ மனந்திரும்புதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- ☞ நீங்கள் மனந்திரும்ப வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்திருக்கிறீர்களா? ஆம் / இல்லை
- ☞ உங்களுடைய உள்ளத்தில் எப்பொழுதாவது ஆண்டவர் கொடுக்கும் பாவ உணர்வு உண்டாயிருக்கிறதா? ஆம் / இல்லை
- ☞ பாவ உணர்வு உங்களுக்கு ஏற்பட்ட போது நீங்கள் என்ன செய்தீர்கள்?

  உள்ளத்தில் ஆழமான துக்கம் வந்தது. என் பாவங்களுக்காக மனம் வருந்தி என் கண்கள் கலங்கின.

  'என் பாவத்தை மன்னியும் ஆண்டவரே!' என்று கதறி அழுது ஜெபித்தேன்.
- ☞ பாவப் பழக்கங்கள் உங்களை விட்டு நீங்கிய அனுபவம் இருக்கிறதா? ஆம் / இல்லை
- ☞ எந்தப் பாவப் பழக்கங்களிலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைத்தது?
- ☞ நான் மனந்திரும்பியிருக்கிறேன் என்று நீங்கள் தெளிவாக தைரியமாகச் சொல்ல முடியுமா? ஆம் / இல்லை
- ☞ தேவனைப் பிரியப்படுத்தும் வகையில் பரிசுத்தமாக வாழ்வதற்கென்று பாவமாகத் தோன்றுபவைகளை விட்டுவிடுவதற்காக நீங்கள் என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள்?
- ☞ பரிசுத்தமாக வாழ்வதற்கென்று நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்?
- ☞ உங்களுக்கு அறிமுகமான யாராவது நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் மனந்திரும்பியிருக்கிறேன்; இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்; பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறேன் என்று சொல்லக் கேட்டிருக்கிறீர்களா?



பின்தொடர்பணி, ஒட்டன்சத்திரம் 624 619 Phone : 89030 11350 Email. selwynde@gmail. com

பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் முக்கியமான வார்த்தைகளில் 'இரட்சிப்பு' என்ற வார்த்தை தனிச் சிறப்புள்ள ஓர் வார்த்தையாகும். 'இரட்சித்தல்' என்றால் 'காப்பாற்றுதல்' என்று பொருள். இவ்வார்த்தை அடிப்படையான, முக்கியமான ஓர் ஆன்மீக அனுபவத்தைக் குறிக்கிறது.

ஆழமான படுகுழியில் விழுந்து கிடக்கும் ஒருவன் தானாகவே வெளியே வரமுடியாத உதவியற்ற நிலையிலிருக்கும் போது யாராவது ஒருவர் வந்து அவனை அக்குழியிலிருந்து வெளியே கொண்டு வந்தால்'அவர் அவனைக் காப்பாற்றினார்' என்று சொல்லுவோம். குழியில் விழுந்த மனிதனை அக்குழியிலிருந்து தூக்கி வெளியே கொண்டு வராவிட்டால் அவன் அப்படியே அக்குழியிலிருந்து அழிவான் அல்லவா? மனிதன் 'பாவம்' என்ற பயங்கரக் குழியில் விழுந்து கிடக்கிறான். பொதுவாகக் குழியில் அல்லது கிணற்றில் விழும் மனிதர் அறியாமையினாலோ அல்லது கவனக் குறைவினாலோ விபத்திற்குள்ளாகின்றனர் என்பதை நாம் அறிவோம். தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் எண்ணத்தில் விழுபவர்களும் உண்டு.

பாவம் என்பது பயங்கரமான குழியாகும். அறியாமையினாலும், நிர்விசாரத்தினாலும், துணிகரத்தினாலும் மக்கள் இப்பாவக் குழியில் விழுந்து விடுகின்றனர், விழுந்து கிடக்கின்றனர். இந்த உதவியற்ற நிலையிலிருந்து அவர்களை காப்பாற்றாவிட்டால் அப்படியே அவர்கள் நித்தியமான அழிவின் ஆக்கினைக்குள்ளாவார்கள்.

பாவத்தின் பயங்கரத்தில் விழுந்து கிடக்கும் மனுக்குலம் பாவத்திலிருந்தும் பாவத்திற்குரிய தண்டனையிலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றப்பட வேண்டும். அதாவது இரட்சிக்கப்பட வேண்டுமென்று இறைவன் விரும்புகிறார்.

மனித வர்க்கம் இரட்சிக்கப்படுவதற்கான திட்டத்தை வெளிப்படுத்தி, அதை நிறைவேற்ற இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு தெய்வத்தின் அவதாரமாக வந்தார்.'உலக இரட்சகர்' என்று அழைக்கப்படும் ஆண்டவராகிய இயேசு மனிதனுடைய பாவத்திற்குப் பிராயசித்தத்தை ஏற்படுத்த சிலுவை மரத்தில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தார். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார்.

'இயேசு' என்றால் **'அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'**(மத்தேயு 1: 21) (காப்பாற்றுவார்) என்று பொருள். **இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரனாகிய இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்.**

*(லூக்கா 19:10)*

இதை வாசிக்கும் நண்பரே! நீங்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்களா? பாவ வாழ்க்கையிலிருந்தும் பாவத்திற்குரிய தீர்ப்பாகிய நித்திய ஆக்கினையிலிருந்தும் இரட்சிக்கப்பட்டவர்கள் 'நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்' என்று திட்டவட்டமாகச் சொல்லக்கூடிய நிச்சயத்தைப் பெற்றிருப்பார்கள்.

இயேசு ஒரு மகான் என்று பலரும் கருதுகிறார்கள். இயேசு கிறிஸ்து உலக இரட்சகர் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் இரட்சகர்; அவரே என்னைப் பாவத்திற்குரிய தீர்ப்பிலிருந்து இரட்சிக்கிறார் என்ற அனுபவத்தைப் பெற்றிருப்பதே எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமாகும்.

நான் பாவமாகிய குழியில் கிடக்கிறேன், எனக்கு இரட்சகர் தேவை என்று முதலாவது உணர வேண்டும்.

இரட்சகரான இயேசுவைத் தவிர வேறு ஒருவரும் பாவத்தினால் வரும் அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது என ஒத்துக்கொள்ள வேண்டும். பாவத்திற்குப் பரிகாரமாக ஆண்டவராகிய இயேசு சிலுவையில் எனக்குப் பதிலாக, என்னுடைய பாவங்களுக்காகப் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்து உயிரோடு எழும்பினார் என்று விசுவாசிக்க வேண்டும். **ஆண்டவராகிய இயேசுவே! என் உள்ளத்தில் வாரும்!** என்று ஆண்டவரை அழைக்க வேண்டும். இதுவே நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கான படிகள். நீங்கள் இதுவரை இரட்சிக்கப் படாவிட்டால் மேலே சொல்லப்பட்டபடி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்.

**'இரட்சிப்பு'** என்ற இந்த ஆன்மீக அனுபவத்தை, இச்சிறு கட்டுரை வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கொடுக்கப் பட்டிருக்கும் கருத்துக்கள் வாயிலாக விளக்குகிறது. கட்டுரையின் வாக்கியங் களைத் தியானித்து, கருத்துக்களை யோசிப்பது இரட்சிப்பின் அனுபவத்தை விளங்கிக் கொள்ளவும், இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் உதவி செய்யும்.



## இரட்சிப்பு

1. இரட்சிப்பு என்றால் என்ன?
    - தேவனுடைய திட்டம்
    - தேவனுடைய ஈவு
2. யார் நம்மை இரட்சிக்க முடியும்?
3. எதிலிருந்து நாம் இரட்சிக்கப் படுகிறோம்?
4. ஏன் நாம் இரட்சிக்கப்பட வேண்டும்?
5. இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?
6. இரட்சிப்பு : எப்படிப்பட்ட அனுபவம்?

### இரட்சிப்பு - வேதவசனங்கள்

*எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது, பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.*

*இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் உலகத்தில் வந்தார். இயேசு என்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார் என்று பொருள்.*

*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை என்றார்.*




*I தீமோத்தேயு 2 : 4, 1 : 15,*

*லூக்கா 19 : 10,*

*மத்தேயு 1 : 21,*

*அப்போஸ்தலர் 4 : 12,*

இரட்சிப்பு என்றால் என்ன

◆ தேவனுடைய திட்டம்

**(i) மனிதனுடைய வீழ்ச்சி :**

எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமை யற்றவர்களாகி, - ரோமர் 3:23

**(ii) தேவனுடைய தீர்ப்பு :**

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். - ரோமர் 6:23

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசி யாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாச முள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும். - *யோவான் 3:18,36*

**(iii) இயேசுவின் சிலுவை :**

சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமா யிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். - I கொரி 1:18, 23

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.
- *கொலோ 1:14*

**இரட்சிப்பு : தேவனுடைய திட்டம்**

இரட்சிப்பு என்றால் என்ன என்பதை விளக்கும் சில உதாரணங்களை நீங்கள் வாசித்திருப்பீர்கள். வெள்ளத்தில் சிக்கிக்கொள்ளுதல், தீ விபத்துக்கள், குழியில் விழுந்து விடுதல், ஒரு வியாதி யினால் திடீரென்று பாதிக்கப்படுதல், கடனில் மூழ்கிவிடும் ஒரு சூழ்நிலை போன்ற ஆபத்தில் சிக்கியுள்ளவர்களைக் காப்பாற்றுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பின் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இதைப்போல பாவத்தில் விழுந்து பாவத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா மனிதரும் ஒவ்வொருவராய் காப்பாற்றப்பட வேண்டும் அல்லது இரட்சிக்கப்பட வேண்டும். தேவனுடைய கோபாக்கினையான நரக தண்டனைக்கு மனிதர் தப்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காக தேவன் தீட்டிய திட்டம் தான் இரட்சிப்பின் திட்டம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லா மனிதரின் பாவங்களுக்கு நிவாரணமாய் சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரிக்க வேண்டும் என்ற இந்தத் தேவனுடைய திட்டம் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நிறைவேறியது.

*இரட்சகராகிய இயேசு சிலுவையில் கிரயம் செலுத்தினதினால் இரட்சிப்பு இலவசம். ஆகவே உலக மக்கள் எல்லோருக்கும் அது அன்பளிப்பாக கொடுக்கப்படுகிறது. விலையேறப் பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைத்தபடியால் அது விலையேறப் பெற்றது. நித்திய வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாக உள்ளதால் அது நித்தியமானது.*



**இரட்சிப்பு:தேவனுடைய ஈவு (பரிசு)**

**(i) இலவசம் :**

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவில் உள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.
(ரோமர் 3:24; எபேசியர் 2:8)

**(ii) விலையேறப்பெற்றது:**

நீங்கள்...... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.

- I பேதுரு 1:18, 19

**(iii) நித்தியமானது:**

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று ... உங்களுக்குச் சொல்லுகிறேன். - யோவான் 6:47

நாம் இரட்சிக்கப்படுவதற்கு நம்முடைய நற்செயல்கள், பக்தி,நற்பணிகள் உதவியாயிருக்க முடியாது. தேவனுடைய கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப் படுகிறோம்.

***நித்திய ஜீவன்***

*மனிதன் உயிர் இருப்பதனால் வாழ்கிறான். ஆனால் மரணம் வரும்போது வாழ்வு முடிந்து விடுகிறது. இயேசு அருளும் நித்திய ஜீவன் முடிவில்லாத அழிக்க முடியாத ஆசீர்வாதமான இறைவாழ்வு ஆகும்.* யோவான் 6 : 47

**2. யார் நம்மை இரட்சிக்க முடியும்?**

பாவத்தில் பிறந்து, பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து** ***மட்டுமே*** இரட்சிக்க முடியும். **'இயேசு'** என்றால் **'அவர் தமது மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'** என்று பொருள். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. இயேசு கிறிஸ்து ஒருவரே **'இரட்சிப்பின் அதிபதி'** என்றும் **'மெய்யான உலக இரட்சகரென்றும்'** அழைக்கப்படுகிறார்.



(4)

இயேசு கிறிஸ்து பரிசுத்தராய் இருப் பதாலும், தேவனுடைய குமாரனாய் இருப்பதனாலும், இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த மனுஷகுமாரனாய் இருப்பதனாலும் அவர் ஒருவரே மனுக்குலத்தைப் பாவத்திற்குரிய தண்டனையிலிருந்தும், நரக ஆக்கினையிலிருந்தும், பாவத்தின் வல்லமையிலிருந்தும், காப்பாற்றவும், மீட்கவும், இரட்சிக்கவும் வல்லவரா யிருக்கிறார்.

இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். *- யோவான் 14:6*

**3. எதிலிருந்து நாம் இரட்சிக்கப்படுகிறோம்?**

வியாதியாயிருக்கிற ஒருவர் மருத்துவரின் முயற்சியினால் வியாதியிலிருந்து காப்பாற்றப்படுகிறார். கடனின் பிடியிலிருக்கும் ஒருவருக்குத் தாராள மனதை உடைய செல்வந்தர் ஒருவர் கடன் செலுத்தும் போது கடன்பட்டவர் மீட்கப்படுகிறார். குழியில் விழுந்து கிடக்கும் ஒருவரை யாராவது ஒருவர் தூக்கிவிடும் போது ஆபத்திலிருந்து அவர் மீட்கப்படுகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவத்திற்குரிய தண்டனையாகிய நரக ஆக்கினையிலிருந்து நம்மை இரட்சிக்கிறார் இது **கடந்த காலத்தைக்** காட்டுகிறது. பாவத்தின் வல்லமையிலிருந்து தொடர்ந்து விழுந்து விடாமல் காப்பாற்றுகிறார், பலப்படுத்துகிறார் இது **நிகழ்காலத்தைக்** காட்டுகிறது. மீட்பின் நாள் என்று ஒருநாள் வரவிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டுமாய் வரும் போது பாவமே இல்லாத பரலோகத்திற்கு நம்மைக் கூட்டிச் செல்லப் போகிறார் இது **எதிர்காலத்தைக்** காட்டுகிறது.

கடந்தகாலம் - பாவத்தின் தண்டனை யிலிருந்து
நிகழ்காலம் - பாவத்தின் வல்லமையிலிருந்து
எதிர்காலம் - பாவமே இல்லாத நிலைக்கு

பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்க இயேசு வந்தார். பாவத்தின் வல்லமையிலிருந்து இரட்சிக்க (விலக்கிக் காத்துக் கொள்ள) இயேசு விசுவாசிகளின் உள்ளத்தில் வாசம் செய்கிறார். பாவமே இல்லாத இடத்திற்கு நம்மை கூட்டிக் கொண்டு போக சீக்கிரத்தில் இயேசு வரப்போகிறார்.



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒருவர் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையைக் கீழ்க்காணும் வகையில் விளக்கலாம்.

**இரட்சிக்கப்படாதவர்களின் வாழ்க்கை...**

ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்னால் உள்ள வாழ்க்கை **பழைய வாழ்க்கை** என்று அழைக்கப்படுகிறது. பழைய வாழ்க்கையில் நம்முடைய மனது, இருதயம், வாழ்க்கை ஆவிக்குரிய பிரகாரமாக எந்த நிலையில் இருந்தது என்று வேதம் சொல்லுகிறது.

**1. மனது :** எல்லாருடைய மனதும் சாத்தானால் ஆவிக்குரிய பிரகாரமாகக் குருடாக்கப்பட்டிருக்கிறது.எது பரிசுத்தம், எது பாவம்? என்பதை அறிய முடியாமல் சிந்தையை அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது.

கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு,...(II கொரி 4:4; எபே 4:18)

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த **மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்து.**- யோவான் 1:9

**2. இருதயம்:** ஆதாம், ஏவாளின் பாவத்தின் காரணமாக, எல்லாருடைய இருதயமும் திருக்குள்ளதாயும், கேடுபாடு நிறைந்ததாயும் இருக்கிறது. இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருப்பதனால் (ஆதியாகமம் 6:5) இருதயத்திலிருந்து தீமையான, புண்படுத்தக்கூடிய உணர்வுகளும் தவறான நடத்தையும், செயல்களும் வெளிப்படுகிறது. மாற்கு 7:21,22 வசனங்களிலுள்ள பாவங்களின் பட்டியலைப் படித்துப்பாருங்கள். (பு.ஏ பக்கம் - 58)

**இருதயம்** என்ற வார்த்தை மனிதனுடைய மனது, உள்ளம், சித்தம் (தீர்மானம் செய்யும் ஆற்றல்) என்ற மூன்றையும் உள்ளடக்கிய ஆன்மா அல்லது ஆத்துமாவைக் குறிக்கிறது.

**3. வாழ்க்கை:** மனது குருடாயிருப்பதினாலும், இருதயம் பொல்லாததாய், திருக்குள்ளதாய் இருப்பதாலும் இரட்சிக்கப்படாதவர்களின் வாழ்க்கை.... நோக்கமற்றதாய், நிலையற்றதாய், நிம்மதி இல்லாததாய், நம்பிக்கையற்றதாய், நித்திய அழிவை நோக்கி விரைகிறதாயிருக்கிறது. ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். *- தீத்து 3:3*

இப்படி நித்திய அழிவிற்கு நேராய் விரைந்து கொண்டிருக்கிற மனிதன் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கடந்த காலப் பாவ வாழ்க்கை, பாரம்பரியம் போன்ற கட்டுப்பாட்டிலிருந்து இயேசு கிறிஸ்துவினால் விடுதலையாக்கப்படுவது **'இரட்சிப்பு'** என்று அழைக்கப்படுகிறது. இயேசு நம்மை இரட்சிப்பதினால் நித்திய அழிவிலிருந்து நாம் தப்பி, மோட்ச பாக்கியம் அடைகிறோம்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் கிருபையும், இரக்கமும், அன்பும், வல்லமையும் உடையவராய் இருக்கிறார். தேவன் நம்மை அழைக்கிறார். நாம் இருக்கும் நிலை எப்படிப்பட்டது என்று உணர்வோம் என்றால் இயேசு கிறிஸ்து அருளும் இரட்சிப்பைத் தயக்கமில்லாமல், தாமதமில்லாமல் பெற்றுக் கொள்வோம்.



நாம் இரட்சிக்கப்பட்டிருப்போம் என்றால் எப்படிப்பட்ட நிலையிலிருந்து நாம் இரட்சிக்கப்பட்டோம் என்று உணர்ந்து பழைய வாழ்க்கைக்குத் திரும்பாமல், புதிய பாதையில் முன்னேறுவோம்.

**4. ஏன் நாம் இரட்சிக்கப்பட வேண்டும்?**

இரட்சிக்கப்படாதவர்கள், இயேசு கிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். நித்திய காலமாக தேவனுடைய கோபாக்கினையை அனுபவிப்பார்கள். நாம் அதற்குத் தப்பித்துக் கொள்ளவேண்டும்.

இயேசு கிறிஸ்து நம்மீது அன்பு வைத்து, நமக்காக மரித்து இலவசமாக இரட்சிப்பை நமக்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். ஆகவே அதைத் தயக்கமின்றி, தாமதமின்றி ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உலகமெங்கும் இப்பொழுது வல்லமையாக செயல்பட்டு வருகிறார்.



மக்களுக்குப் பாவ உணர்வைக் கொடுத்து, நித்திய ஜீவனுக்கு நேராக வாழ்க்கைப் பாதையைத் திருப்பி, இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்தி வருகிறார். ஆவியானவருடைய செயல்பாட்டிற்கு இணங்கி நாம் இரட்சிக்கப்பட வேண்டும்.

இப்பொழுது நாம் வாழும் காலம் கிருபையின் காலம். விரைவில் முடிவடையப்போகிறது. இதுவரை இரட்சிக்கப்படாவிட்டால் இப்பொழுதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள். - *II கொரி 6:2*

**5.இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?**

**(i) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்.**

**(ii) அவரை விசுவாசித்தல்.**

**(iii) மனந்திரும்புதல்.**

**(i) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்:**

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். - யோவான் 1:12

**(ii) அவரை விசுவாசித்தல் :**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.-அப்போஸ்தலர் 16:31

**(iii) மனந்திரும்புதல்:**

உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். - *அப்போஸ்தலர் 3:20*

இந்த 3 படிகளும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையன. இந்த மூன்று தீர்மானங்களையும் எடுக்க தேவனே நமக்குக் கிருபை கொடுக்கிறார்.

### 6. இரட்சிப்பு : எப்படிப்பட்ட அனுபவம்?

இரட்சிப்பு என்பது ஓர் ஆன்மீக அனுபவமாகும். நம்முடைய ஆத்துமாவில் நடைபெறும் உள்ளான ஓர் அனுபவமாகும். ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டும். ஆகவே இரட்சிப்பு ஒரு தனிப்பட்ட அனுபவமாகும். தேவனுடைய கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்படுகிறோம். இது நம்மால் உண்டானதல்ல. இது தேவனுடைய அன்பளிப்பாகும்.

ஓர் ஆழமான குழிக்குள் விழுந்து கிடக்கும் ஒருவனுக்கு உள்ளே போடப் படும் கயிறைக்கூடக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள பெலன் இருக்காது. அவனைக் காப்பாற்றுவதற்காக உள்ளே இறங்கும் ஒருவர் அவனைத் தூக்கி எடுக்கும் போது அவன் அவருக்கு ஒத்துழைக்க வேண்டும். இதைப் போலத் தான் ஆன்மீக இரட்சிப்பும் இருக்கிறது.

இரட்சிக்கப்படுதல் திட்டவட்டமான ஓர் அனுபவமாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சவுலை தமஸ்கு பட்டணத்திற்குச் செல்லும் வழியில் சந்தித்தபோது சடிதியான திருப்பம் அவருக்கு ஏற்பட்டது. சகேயு மரத்திலிருந்து அழைக்கப்பட்டபோது திடீரென்று அவருக்குத் திருப்பம் வந்தது. ஆனால் **இரட்சிப்பு** பலருக்கும் படிப்படியான அனுபவமாயிருக்கலாம்.

**(i) பாவ உணர்வு :**

மனிதன் பாவம் செய்யும்போது பொதுவாகக் குற்ற உணர்வு ஏற்படுகிறது. குற்ற உணர்வு வேதனை நிறைந்ததாகும். ஆனால் தேவனுடைய ஆவியானவர் அருளும் பாவ உணர்வு ஆழமான துக்கத்தையும், பாவத்தின் மீது வெறுப்பையும், தேவனுடைய இரக்கத்தை நாடுவதற்கான கிருபையையும் ஏற்படுத்துகிறது.

அவர் (தேற்றரவாளன்) வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். - யோவான் 16:8

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

*- அப்போஸ்தலர் 2:37*

ஒருவர் இரட்சிக்கப்படும்போது தங்களுடைய பாவத்திற்கான ஆழமான துக்கத்தோடு அழுது ஆண்டவருடைய இரக்கத்திற்காக மன்றாடி மன்னிப்பு கேட்கிறார்கள். தேவன் உண்மையாய் மனந்திரும்புகிறவர்களை மன்னிப்பது மட்டுமல்ல; அவர்களுக்கு பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுதலை தருகிறார்.

**(ii) விடுதலை :**

இரட்சிக்கப்படுகிறவர்களுக்குப் பல சமயங்களில் உடனடியான, நிரந்தரமான விடுதலை கிடைக்கிறது. பாவப்பழக்கங் களுக்கு அடிமையாய் இருந்தவர்கள் திடீரென விடுதலை பெற்று மாற்றப் பட்டிருக்கிறார்கள். சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலை யாக்கும். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.- யோவான் 8:32,36

**(iii) நிச்சயம்:**

இரட்சிக்கப்படும்போது உணர்ச்சிப் பூர்வமான அளவு மட்டுமல்ல மனதிலும், ஆவியிலும் உறுதிப்பாடு கிடைக்கிறது. தேவனுடைய பிள்ளையாய் மாறிவிட்டோம், பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன, மோட்ச பாக்கியம் உண்டு என்ற நிச்சயத்தைத் தேவனுடைய ஆவியானவர் கொடுக்கிறார்.

இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனா யிருக்கிறானே. *- லூக்கா 19:9*

## சகேயு இரட்சிக்கப்படுதல்

லூாக்கா 19 : 1-10
புதிய ஏற்பாட்டில் பக்கம் 111-112.

1. ஆண்டவராகிய இயேசு எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்து போகையில்,

2. ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,

3. இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக் கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்,

4. அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.

5. இயேசு அந்த இடத்தில் வந்த போது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.

6. அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்.

7. அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறு முறுத்தார்கள்.



8. சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.

9. இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே.

10. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

**இயேசு உங்களை நேசிக்கிறார்!**



(8)

## இரட்சிக்கப்பட்டவர்களுக்கு...

**'இரட்சிப்பு'** என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் முக்கியமான வார்த்தைகளில் ஒன்றாகும். இந்த வார்த்தை ஒரு முக்கியமான ஆன்மீக அனுபவத்தை விளக்குகிறது. **'இரட்சிப்பு'** என்ற வார்த்தையின் பொருள் **'காப்பாற்றுதல்'**,**'தப்புவிக்கப்படுதல்'** என்பதாகும். ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்க வேண்டிய இந்த ஆவிக்குரிய அனுபவம் தேவனுடைய கிருபையால் கிடைக்கிறது.

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்? என்று கேள்வி கேட்கப்படுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். நீங்கள்இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம். நீங்கள் இரட்சிப்பைப் பெற்றிருப்பீர்களென்றால் உங்களது அனுபவத்தைப் பற்றிய தெளிவான அறிவும், நிச்சயமும் தேவை. சகேயு இயேசுவை வீட்டிற்கு அழைத்துச் சென்று, தன்னுடைய பழைய வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ள தீர்மானத்தைச் சொன்னபோது **'இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது'** (லூக்கா 19:9) என்று இயேசு சொன்னார். இயேசுவின் வார்த்தைகள் சகேயுவின் அனுபவத்தை உறுதி செய்தது.

### நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?

இந்தக் கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. நீங்கள் படிக்கிறீர்களா? வேலை செய்கிறீர்களா? எங்கு வாழ்கிறீர்கள்? நீங்கள் திருமணமானவரா? என்ற முக்கியமான கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு திட்டவட்டமான ஆம் அல்லது இல்லை என்ற பதில் தான் நாம் சொல்ல முடியும். இதைப் போல ஒரு தனிப்பட்ட கேள்வி தான் **நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?**

கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்தவ வளர்ப்பில் வளர்க்கப் பட்டவர்களுக்கு இரட்சிக்கப்படும் அனுபவம் படிப்படியாக நடை பெறுவதாக இருக்கலாம். சிலருடைய அனுபவ சாட்சிகளில் கேள்விப் படுவதைப் போல் குறிப்பிடக்கூடிய, பெரிய, விவரமான மாற்றங்கள் இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் ஜெபத்துடன் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால் ஆண்டவருடன் நெருங்கி வாழ்வதில் திட்டவட்டமான முன்னேற்றத்தை சொல்ல முடியும். இரட்சிக்கப்பட்ட வர்களுக்கு ஆண்டவராகிய இயேசுவுடன் நெருக்கமான உறவு இருக்கும். பாவ மன்னிப்பின் நிச்சயமும், பாவப் பழக்கங்களிலிருந்து விடுதலையும் இருக்கும். இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வமும் இருக்கும்.

ஆண்டவராகிய இயேசுவை பல காலமாக நீங்கள் நம்பியிருக்கலாம். அவரிடம் ஜெபித்துப் பல ஆச்சரியமான பதில்களையும், அற்புதமான ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கலாம். இப்படி உங்கள் நம்பிக்கை வளர்ந்தி ருக்கிறது. அதற்கும் மேலாக நீங்கள் தனிப்பட்ட விதத்தில் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக விசுவாசித்து, ஏற்றுக்கொண்ட திட்டவட்டமான மறுக்கமுடியாத, மறக்கமுடியாத தீர்மானமும், அனுபவமும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

1 இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

1. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்.
2. அவரை விசுவாசித்தல்.
3. மனந்திரும்புதல்.

**1. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்:**

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். - *யோவான் 1:12*

**2.அவரை விசுவாசித்தல்:**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். - *அப்போஸ்தலர் 16 : 31*

**3. மனந்திரும்புதல்:**

உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப் படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். - *அப்போஸ்தலர் 3:20*

இந்த 3 படிகளும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையது. இந்த மூன்று தீர்மானங்களையும் எடுக்க தேவனே நமக்கு கிருபை கொடுக்கிறார்.

இதுவரை நீங்கள் இரட்சிக்கப் பட்டிராவிட்டால் கீழ்க்காணும் ஜெபத்தை ஏறெடுங்கள்.

**ஆண்டவராகிய இயேசுவே! உலக இரட்சகராகிய உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். எனக்காக, என்னுடைய பாவங்களுக்காக, எனக்குப் பதிலாக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தீர், மூன்றாம் நாள் உயிரோடே எழும்பினீர் என்று மனப்பூர்வமாக விசுவாசிக்கிறேன்.**

**என் வாழ்க்கையை உம்மிடத்தில் அர்ப்பணிக்கிறேன். இனி உம்மை** மட்டும் நான் பின்பற்றுவேன். **இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.**



2. இரட்சிக்கப்படும் போது நடப்பது என்ன?

1. தேவனுடைய வசனத்தின் வல்லமை
2. பரிசுத்த ஆவியானவரின் கிரியை
3. பாவ உணர்வு
4. கல்வாரியில் இயேசு கிறிஸ்து செய்து முடித்தது பற்றிய தெளிவும், உணர்வும்.
5. அறிக்கையின் ஜெபம், அர்ப்பணிப்பின் ஜெபம்
6. விசுவாசம் உண்டாகிறது.
7. விடுதலை உணர்வு
8. சந்தோஷம் / சமாதானம்
9. மாற்றத்திற்கான அடையாளங்கள், அறிகுறிகள்
10. உறுதியும், தெளிவும்

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறன்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. II கொரி 5:17

இரட்சிக்கப்பட்டவர்களுக்குள்ளே பரிசுத்த ஆவியானவர் வாசஞ்செய்கிறார். (தங்கியிருக்கிறார்)

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*ஒருவர் இரட்சிக்கப்படும்போது அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். இந்த ஆசீர்வாதங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அல்லது ஆன்மீக வாழ்க்கைக்குரிய என அழைக்கப்படுகின்றன. அவைகளில் 10 ஆசீர்வாதங்களும் வேத வசனங்களும் அடுத்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமாக இரட்சிப்பின் நிச்சயம் அல்லது பாவமன்னிப்பின் நிச்சயம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.*

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.* (எபேசியர் 1: 3)

### 3. இரட்சிப்பினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

1. இரட்சிப்பின் சந்தோஷம்
2. பாவ மன்னிப்பின் நிச்சயம்
3. நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை
4. புது சிருஷ்டி / மறுபிறப்பு (புதிய வாழ்க்கை)
5. புத்திர சுவிகாரம்
6. பரிசுத்த ஆவியானவர்
7. தேவனோடு ஐக்கியம் (சமாதானம்)
8. நீதிமானாக்கப்படுதல்
9. பரிசுத்தமாக்கப்படுதல்
10. பாடுகளில் ஐக்கியம், ஆசீர்வாதங்கள்

**மூன்று முக்கியமான ஆசீர்வாதங்கள்:**

1.தேவனோடு **புதிய உறவு** யோவான் 1 : 12

2.நம்முடைய உள்ளத்தில் **புதிய தன்மை** - II கொரிந்தியர் 5 : 17

3.இயேசுவை நோக்கிச் செல்லும் **புதிய பாதை** - எபிரெயர் 12 : 1

### 1) இரட்சிப்பின் நிச்சயம் - விளக்கம்

இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்ற அனுபவம் மட்டுமல்ல; அந்த அனுபவத்தைப் பற்றிய நிச்சயம் தேவை. இது **இரட்சிப்பின் நிச்சயம்** என்றழைக்கப்படுகிறது. **உதாரணமாக:** ‘நான் தேர்வு நன்றாக எழுதியிருக்கிறேன்’, ‘நிச்சயம் தேர்ச்சி பெறுவேன்’, ‘மற்றவர்கள் நான் பாஸ் பண்ணிவிட்டேன்’ என்று சொல்கிறார்கள் என சொல்லலாம். ஆனால் அதைவிட உறுதியானது, முடிவானது‘செய்தித்தாளில் என் நம்பர் வந்திருக்கிறது,’ ‘மார்க் அட்டையில் என் மார்க் வந்திருக்கிறது’ என்று உறுதியாகச் சொல்வதாகும். இதைப்போல இரட்சிக்கப்பட்டவர்களுக்கு வசனத்தின் மூலமாக கிடைக்கும் அதிகாரப் பூர்வமான நிச்சயம் அனுபவத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

இரயில் நிலையத்தில் பிளாட்பார்ம் டிக்கெட் இல்லாமல் ஒருவர் உள்ளேயிருந்தால் அவருடைய மனநிலை எப்படியிருக்கும்? வெளியே வரும் வரைக்கும் சந்தேகங்களும், பயமும், கலக்கமும் அதிகமாக பாதிக்கும் அல்லவா? ஆனால் பிளாட்பார்ம் டிக்கெட் உடைய ஒருவர் தைரியமாய் கலக்கமில்லாமல் இருக்க முடியுமே! அதைப் போல இரட்சிப்பின் நிச்சயத்தை உடையவர்கள் சந்தேகமில்லாமல் தைரியமாகவும், கலக்கமில்லாமல் தெளிவுடனும் இருக்க முடியும்.

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்ற தெளிவான உறுதி.

இயேசு, அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார். - மாற்கு 2:5

2. எனக்குள் நித்திய ஜீவன் உண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கை.

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். - I யோவான் 5:12

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். - யோவான் 6 : 47

3.நான் மரித்தால் நிச்சயமாக பரலோகம் செல்வேன்,என் பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்ற உள்ளான நிச்சயம்.

ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப் படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப் படுங்கள் என்றார். - லூக்கா 10:20

### இரட்சிப்பின் நிச்சயம் - ஆதாரங்கள்

1. தேவனுடைய வார்த்தை
2. பரிசுத்த ஆவியானவரின் சாட்சி
3. புதிய தன்மை பெற்ற புதிய மனிதன்
4. வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்

### 1.தேவனுடைய வார்த்தை:

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அருளும் வாக்குத்தத்தம், வேத வசனத்தை வாசித்துத் தியானிப்பதால் விசுவாசம் உருவாவது மட்டுமல்ல உறுதியடைகிறது. அறிவளவில் மட்டுமல்ல அனுபவப் பூர்வமாக வசனம் செயல்படுகிறது. வேதவசனத்தை விசுவாசிப்பதன் மூலம் நாம் மகிமைப்படுகிறோம். வேத வசனத்தை அறிந்திருப்பது விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது.

என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி,ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

- யோவான் 5:24

### 2. பரிசுத்த ஆவியானவரின் சாட்சி:

பரிசுத்த ஆவியானவர் ஒருவருடைய உள்ளத்தில் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்.பாவ உணர்வைப் பெற்று, மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது பாவமன்னிப்பு கிடைக்கிறது.

அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். - யோவான் 16:8

தேவனுடைய பிள்ளை என்ற ஒரு புதிய உறவையும், அந்தஸ்தையும் தேவன் இலவச அன்பளிப்பாகக் கொடுக்கிறார். விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய பிள்ளைகளென்று ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார்.

மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிற படியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கி றோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ... அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

கலாத்தியர் 4:6; ரோமர் 8:16; யோவான் 1:12

### 3.புதிய தன்மை பெற்ற புதிய மனுஷன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால் புதிய தன்மை நமக்குள் உண்டாகிறது. பழைய பாவப் பழக்கங்கள் உங்கள் மீது செயலற்றதாக இருக்கிறதென்று நீங்கள் உணரும் போது பரிசுத்தமாக வாழ தைரியம் கிடைக்கிறது. இரட்சிப்பின் நிச்சயம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்கும் இடையேயுள்ள உறவை உறுதிப்படுத்துகிறது. உள்ளான பரிசுத்தத்தில் பெலனடையச் செய்கிறது. இரட்சிப்பின் நிச்சயத்தைப் பற்றிய நம்பிக்கையை வளர்க்கிறது.

நாம் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெறும் போது நமக்கு கிடைக்கும் மிகவும் முக்கியமான ஆசீர்வாதம் தேவன் நமக்குள் உருவாக்கும் புதிய தன்மையாகும்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின. -II கொரிந்தியர் 5:17

தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். I யோவான் 3:9

### 4.வாழ்க்கையில் வந்திருக்கும் மாற்றங்கள்

ஒருவர் உண்மையாய் மனந்திரும்பும் போது தங்களுக்குள்ளே வல்லமையான, தெளிவான மாற்றம் வந்திருக்கிறதை உணரமுடியும். பல ஆண்டுகளாக பலவிதமான பாவப்பழக்கங்களுக்கு அடிமைகளாய் வாழ்ந்தவர்கள், ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொண்ட பின்பு அந்த பழக்கங்கள் தங்களைவிட்டு அகன்று போனதைப் பார்த்திருக்கிறார்கள். மற்றவர்களும் இதை கவனித்திருக்கிறார்கள். சகேயுவின் வாழ்க்கையிலும், சவுலின் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட மாற்றங்கள் வந்திருந்ததை படித்திருக்கிறோம்.

(லூக்கா 19, அப்போஸ்தலர் 9)

உங்களுடைய வாழ்க்கையில் இப்படிப் பட்ட மாற்றங்கள் வந்திருக்கிறதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? பெரிய அளவிலே, திடீரென்று ஒரு மாபெரும் மாற்றம் இல்லாவிட்டாலும், திட்டவட்டமாக உங்களுடைய வாழ்க்கையில் நீங்களே மாற்றங்களை கவனித்திருக்கலாம். இதுவும் இரட்சிப்பின் நிச்சயத்திற்கு ஓர் ஆதாரமாகும்.

## இரட்சிப்பின் நிச்சயம் பெறத் தடைகள்

### 1. சந்தேகம்

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

*- யாக்கோபு 1:6*

### 2. உலகத்தின் இழுப்புகளில் சிக்கிக் கொள்ளுதல்

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். *- I யோவான் 2 : 15, 17*

### 3. மாம்சத்தின்படி நடப்பது

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சத்துக்குட் பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமா யிருக்கமாட்டார்கள். *- ரோமர் 8: 5, 8*

## இரட்சிப்பின் நிச்சயம் : சாட்சிகள்

நான் இரட்சிக்கப்பட்ட பின்பும் அடிக்கடி என் உள்ளத்தில் நான் செய்திருந்த சில பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் என்னை அழுத்தி வந்தது. சாத்தான் இப்படி எனக்கு கொடுத்த சந்தேகங்களை முறியடிக்க வழியறியாது கலங்கினேன். வேதாகமத்தை ஒரு நாள் வாசித்துக் கொண்டிருக்கும் போது (ஏசாயா 44:22) என்ற வசனத்தின் மூலம் தெளிவாக ஆண்டவர் என்னோடு பேசினார். நான் இரட்சிக்கப்பட்ட நாளின் தேதியை அந்த வசனத்தின் அருகே எழுதி வைத்துக் கொண்டு, அந்த வசனத்தை அடிக்கடி தியானித்து சந்தேகத்தின் மீது வெற்றி கண்டேன். **- S.D.E.**

உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு;உன்னை நான் மீட்டுக் கொண்டேன். - ஏசாயா 44:22

நான் சிறுவயதிலேயே என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். ஆனால் கல்லூரி வாழ்க்கையின் ஆரம்பத்தில் என் ஒப்புக்கொடுத்தலை புதுப்பித்து ஊழியத்தில் ஈடுபடத் துவங்கியபோது இரட்சிப்பைப் பற்றிய முன்பு இருந்த சந்தேகங்களும் பயமும் நீங்கி உறுதியும் நிச்சயமும் பெற்றேன்.

**- Bro.** பிராங்க்ளின்

## இரட்சிப்பின் நிச்சயம்

என்னுடைய பள்ளி வாழ்க்கையில் ஒரு சகோதரி மூலமாக நான் இரட்சிப்பின் கிருபைக்குள்ளாக வந்தேன். **'நீ போ உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'** என்ற வசனம் எனக்கு இரட்சிப்பின் நிச்சயத்தை தந்தது.- **Sr. பிரிஸ்கில்லா**

நான் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் நான் ஒரு பாவி என்ற உணர்வு என்னை பல நாட்கள் அழுத்தியது. பலநாட்கள் பாரங்களினால் கஷ்டப் பட்டேன்.தேவனிடத்தில் எப்படியாவது என்னை மன்னிக்க வேண்டும் என ஜெபித்தபோது **'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'** என்ற தமது வார்த்தையைக் கொடுத்தார். சமாதானம் பெற்றேன் இரட்சிக்கப்பட்டேன் என்ற நிச்சயத்தையும் தந்தார். **- D.D**

நான் பள்ளியில் படிக்கும்போது என் நண்பர் இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்தினார். என் பாவங்களை அறிக்கை யிட்டு ஜெபித்தபோது தேவ சமாதானத்தைப் பெற்றேன். அதிலிருந்து தேவன் என்னை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்துகிறார்.

**- Mr. Frank Jeyaraj**

நான் இந்துக் குடும்பத்தில் பிறந்தவள்; குணமாக்கும் கூட்டத்தில் பங்கு கொண்டபோது ஆண்டவரின் வல்லமையை உணர்ந்தேன். எனக்கு அது புதிதான அனுபவமாயிருந்தது. ஆண்டவர் என்னைத் தொடர்ந்து இரட்சிப்பின் பாதையில் வழி நடத்துகிறார். – **Sr. கீதா**

நான் சிறுவயது முதலே தேவனுடைய காரியங்களில் பக்தியாக வளர்க்கப் பட்டேன். திருமணமான பின் ஒரு கூட்டத்தில் என்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தேன். அப்போது Bro. N. Daniel என்ற அந்த தேவ மனிதர் நீ ஏற்கனவே இரட்சிக்கப் பட்டுள்ளாய் என்றார். **- J.E**

நான் சிறுவயதில் இருந்து பக்தியான வழிகளில் வளர்க்கப்பட்டேன். நான் பெரிய பாவியென உணர்ந்தது இல்லை. ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் எடுத்தபோது இரட்சிப்பின் நிச்சயம் பெற்றேன். எனக்கே முன்பு தெரியாத எனக்குள் இருந்த கோபப்படும் சுபாவம் போன்ற பிடியிலிருந்து தேவன் என்னை விடுவிக்கிறார், பரிசுத்தமாக்குகிறார்.- **Sr. அலக்ஸாண்டரியா**

நான் இரட்சிக்கப்பட்ட பின்னரும் மரணத்தைப் பற்றிய பயத்தினால் பிடிக்கப்பட்டிருந்தேன்.'ஜீவ காலமெல்லாம்' மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார் (*எபிரெயர் 2:15*) என்ற வசனத்தை நான் வாசித்தபோது மரணபயம் என்னை விட்டு நீங்கியது. **- S.R.K**

1. உண்மை **- FACTS**
2. உணர்வுகள் **- FEELINGS**
3. உறுதியான விசுவாசம் **- FAITH**

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை விசுவாசத்தினால் உண்மை என்ற அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆவிக்குரிய வாழ்க்கையில் பல்வேறு வகையான உணர்ச்சிகளுக்கு இடம் உண்டு. நம்முடைய வாழ்க்கை உணர்ச்சிகள் மேல் கட்டப்படக்கூடாது. உண்மை வேதவசன சத்தியத்தின் மேல் தொடர்ந்து கட்டப்பட வேண்டும். உணர்ச்சிப்பூர்வமான அனுபவங்கள் உண்மையான அனுபவங் களாயிருக்கலாம். ஆனாலும் அவைகளை ஆவிக்குரிய வாழ்க்கையின் அஸ்திபார மாக்கிக் கொள்வது உறுதியாக இருக்காது.

ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்து மிருக்கிறேன்.

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப் பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டி ருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது (*II தீமோத்தேயு 1:12; ரோமர் 6:14*)

## இரட்சிப்பினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

**1.இரட்சிப்பின் சந்தோஷம்:**

நாம் பாவத்திற்குரிய தண்டனைக்குத் தப்பிக் கொள்வது தேவன் கொடுக்கும் பெரிய பாக்கியம் ஆகும். உம்முடைய இரட்சண்யத்தின் *(இரட்சிப்பின்)* சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்தீர் என்று தாவீது சொல்கிறார். *(சங்கீதம் 51:12)* இரட்சிக்கப்பட்ட பின்னர் நாம் பாவம் செய்யும்போது இரட்சிப்பை நாம் இழப்பதில்லை. சந்தோஷத்தை இழந்து விடலாம். நாம் மீண்டும் தேவனிடத்தில் திரும்பும் போது தேவன் மீண்டும் நம்மைப் புதுப்பிக்கிறார்.

**2. பாவ மன்னிப்பின் நிச்சயம்:**

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவது மட்டுமல்ல, மன்னிக்கப்பட்டுவிட்டது என்ற உறுதியையும் ஆவியானவர் நமக்குத் தருகிறார்.

மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

மாற்கு 2:5; யோவான் 16:8

**3. நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை :**

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று ... சொல்லுகிறேன். *யோவான் 6:47*

**4. புதுசிருஷ்டி :**

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. II கொரிந்தியர் 5:17

**5. புத்திர சுவிகாரம் :**

அந்தப்படி, ... நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

ரோமர் 8:15; கலாத்தியர் 3:26

*குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.*

*யோவான் 5 : 12*

**6. பரிசுத்த ஆவியானவர்:**

.... பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளு கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? *லூக்கா 11:13*

நாம் இரட்சிக்கப்படும்போது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்தில் வந்து தங்குகிறார். நம்மை போதித்து வழிநடத்துகிறார். நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் போது வல்லமையையும், வெளிப்பாடுகளையும் அருளுகிறார்.

**7. தேவனோடு ஐக்கியம் :**

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

Iகொரி 1:9

**8. நீதிமானாக்கப்படுதல்:**

நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

ரோமர் 5:9

**9. பரிசுத்தமாக்கப்படுதல்:**

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற... எழுதுகிறதாவது. I கொரிந்தியர் 1:2 (7)

**10. பாடுகளில் ஐக்கியம்**

கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.
பிலிப்பியர் 1 : 29

இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந் திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,

அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.
பிலிப்பியர் 3 : 10,11

## 4 இரட்சிக்கப்பட்டவர்களின் பொறுப்புகள்

விலையேறப்பெற்ற ஒரு அன்பளிப்பை நாம் பெற்றுக்கொள்ளும் போது அதைப் பயன்படுத்தவும், காத்துக் கொள்ளவும் பொறுப்பு நமக்கு உண்டு. சுமார் ரூ. 50,000/- மதிப்புள்ள ஒரு டூ-வீலர் பைக்கை ஒரு வாலிபன் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த டூ-வீலரைப் பயன்படுத்தவும், அதை பத்திரமாக வைத்துக் கொள்ளவும், அவ்வப்போது பெட்ரோல் ஊற்றி கவனமாக ஓட்டவும், அவனுக்கு பொறுப்பு உண்டு. டூ-வீலர் வாங்கு வதற்கு அவன் பணம் செலவழிக்க வில்லை அவனால் செலவழிக்க முடியாது. ஆனால் இலவசமாகப் பெற்றுக்கொண்ட அந்த டூ-வீலரைப் பயன்படுத்தவும், பராமரிக்கவும் அவன் விலைக்கிரயம் கொடுக்க வேண்டும்.

இரட்சிப்பும் இதைப் போலத்தான் இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படு வதற்கு நம்முடைய எந்த விதமான பக்தியும், கடமையும், நற்பணிகளும், தொண்டுகளும் உதவாது. இயேசு கிறிஸ்து இரட்சிப்பை நமக்கு இலவசமாக அளிக்கிறார். இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட நாம் அதைக் காத்துக்கொள்ளவும், இரட்சிப்பின் அனுபவத்தில் வளரவும் நமக்கு பொறுப்புகளும், கடமைகளும் உண்டு.

அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் பிலிப்பியர் 2 : 12

இரட்சிப்பு இலவசம். தகுதியற்ற நமக்கு கிருபையினால் கிடைக்கிறது. நம்முடைய பக்தி செயல்களோ சுயவெறுப்போ இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. இரட்சிக்கப் பட்டவர்கள் இயேசுவைப் பின்பற்றும் வாழ்க்கைக்கு ஒழுங்கும் கட்டுப்பாடும் தேவை. இந்த வாழ்க்கை சீஷத்துவம் என்று அழைக்கப்படுகிறது.

**இரட்சிக்கப்பட்டவர்களின் பொறுப்புகளில் மிக முக்கியமான 5 செயல்கள்**

1. ஜெபம்
2. பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, தியானித்தல்
3. ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுதல்
4. விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுதல்
5. இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்தல்

இந்த 5 செயல்களும் நமக்கு கொடுக்கப்பட்ட பாக்கியங்களும், பொறுப்புகளும் ஆகும்.

இரட்சிக்கப்பட்டவர்கள் வளருவதற்கான அடிப்படையாகவும், வளர்ச்சிக்கான அடையாளங்களாகவும். இவைகள் அமைந்துள்ளன. அனுதினமும் இந்த ஐந்தையும் கடைப்பிடியுங்கள்.

'விசுவாசி வளர அடிப்படைத் தேவைகள்' என்ற எமது புத்தகத்தை நீங்கள் வாங்கிப் பயன்படுத்தலாம்.

**5 மற்றவர்கள் இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?**

1. அனுதினமும் ஜெபிக்க வேண்டும்.
2. தொடர்பு கொண்டு நட்புறவை வளர்க்க வேண்டும்.
3. ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி நாம் அறிந்திருப்பதைப் பற்றியும், அவருடைய கிருபையினால் அனுபவிப்பதைப் பற்றியும் சாட்சியாகச் சொல்ல வேண்டும்.
4. சுவிசேஷம், புதிய ஏற்பாடு, பைபிள், வேத வசனங்கள், ஆவிக்குரிய பிரதிகள், புத்தகங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
5. கிறிஸ்தவ வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை அறிமுகப் படுத்த வேண்டும்.
6. இரட்சிப்பின் சத்தியத்தை அவர்களுக்கு விளங்கும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

**மற்றவர்கள் யார்?**

நம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், உடன் வாழ்பவர்கள், உடன் படிப்பவர்கள் அல்லது உடன் வேலை செய்பவர்கள், நாம் சந்திப்பவர்கள்.

**6. இரட்சிப்பு - வேதவசனங்கள்**

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.

இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் உலகத்தில் வந்தார்.

'இயேசு என்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' என்று பொருள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?

உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.



I தீமோ 2:4; 1:15; லூக்கா 19:10; மத்தேயு 1:21; அப் 16:31 எபிரெயர்2:4; மாற்கு 5:34; எபேசியர் 2:8; I கொரிந்தியர் 1:18

(9)

நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளைச் சொல்லுவான்.

இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இந்த மனுஷர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்.

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமும் கட்டளையிடப்படவும் இல்லை.

*அப்போஸ்தலர் 11:14; 13:26; 16:17; 4 : 12*

### *7. இரட்சிக்கப்பட்டவர்களின் கவனத்திற்கு!..*

1. இரட்சிக்கப்பட்டவர்கள் வளருவது **சீஷத்துவம்** என்று அழைக்கப் படுகிறது.

2. இரட்சிக்கப்பட்டவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

3. இரட்சிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் ஆண்டவரைச் சார்ந்து கணக்கு ஒப்புவிக்கும் வகையில் பரிசுத்தமாக வாழ வேண்டும்.

4. இரட்சிக்கப்பட்டவர்கள் ஆவிக்குரிய சபையில் அங்கத்தினராக ஐக்கியங் கொண்டு தவறாமல் கர்த்தருடைய பந்தியில் சேர வேண்டும்.

5. இரட்சிக்கப்பட்டவர்கள் மற்ற விசுவாசிகளோடு ஆவிக்குரிய பரிமாற்றம் செய்து, ஜெபித்து ஐக்கியத்தில் உறுதியடைய வேண் டும்.

6. இரட்சிக்கப்பட்டவர்கள் மிக விரைவில் வரப்போகிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஒவ்வொருநாளும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.



பின் தொடர்பணி, ஒட்டன்சத்திரம் 624619, Ph : 8903011350 Email.selwynde@gmail. com

ஒரு மனிதன் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது அவனுக்குள் விசுவாசம் உருவாகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலக இரட்சகரென்றும், அவர் சிலுவை மரத்தில் தன்னுடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி, மனிதனுடைய பாவத்திற்கான பிராயச் சித்தத்தைச் செய்தார் என்றும் ஒருவன் நம்பி, அந்த ஆவிக்குரிய கிருபையைத் தனக்கென்று ஏற்றுக் கொள்ளும்போது, இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் அந்தப் புதிய வாழ்க்கை தொடங்குகிறது.

பரிசுத்த வேதாகமம் கூறும் மேற்கூறிய உண்மைகளைக் கேள்விப்பட்டு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் ஒருவர் ‘விசுவாசி’ என அழைக்கப்படுகிறார். ‘விசுவாசி’ என்றால் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவன் (நம்புபவன்) என்றும், அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் விசுவாசத்தைக் (நம்பிக்கை) கொண்டவன் என்றும் பொருளாகும்.

**விசுவாசி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வேண்டும்**. அப்படி வளராவிட்டால் பாவ சோதனைகளில் விழுந்துவிடாத வெற்றியான வாழ்க்கை வாழ முடியாது. பிரச்சனைகளும், போராட்டங்களும், பாடுகளும் வரும்போது சோர்ந்து போக நேரிடும்.

ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவானவைகளைச் செய்தால் பாவ சோதனைகளில் விழுந்து விடாமல், பாடுகளில் சோர்ந்து போகாமல், விசுவாச வாழ்க்கையில் பின்வாங்காமல் முன்னேற முடியும். தொடர்ந்து விசுவாசத்தில் உறுதியாய் இருக்கவும், ஆவிக்குரிய கனிகொடுக்கவும் கீழ்க்கண்ட **ஐந்து செயல்களும்** ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் அனுதினமும் இடம் பெற வேண்டும்.

விதை விதைக்கும் போது, அது வளர்ந்து பலன்தர... **நல்ல நிலம், நீர், சூரிய வெளிச்சம், காற்று, உரம்** ஆகியவை தேவையாயிருப்பது போல இருதயத்தில் தேவனுடைய வசனத்தை ஏற்றுக் கொண்ட விசுவாசி வளர, கனி தர மேற்கூறிய ஐந்து காரியங்களும் தேவை. அவைகள் ஒவ்வொன்றையும் குறித்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

**அந்த ஐந்து செயல்களாவன...**

ஜெபம் செய்தல்.

பரிசுத்த வேதாகமத்தைப் பயன்படுத்துதல்

ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுதல்.

விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுதல்.

இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்தல்.

இந்த ஐந்து அம்சங்களும் ஆண்டவர் நமக்கு அருளியிருக்கும் கிருபையின் சிலாக்கியங்களாகும். இவைகள் நாம் கடைப்பிடிக்க வேண்டிய கற்பனைகளும், ஒழுங்குகளுமாகும் இதில் ஒவ்வொன்றும் மிக மிக அவசியமானதே. இந்த ஐந்தில் ஒன்று இல்லாவிட்டாலும் ஆவிக்குரிய வளர்ச்சி பாதிக்கப்படும். இவை ஒவ்வொன்றும், ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையில் இடம் பெற்றால், அவன் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் வேரூன்றவும், கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி யடையவும் முடியும்.

இந்த 5 செயல்களிலும் விசுவாசி சீராக வளரும்போது பாவத்தின்மேல் வெற்றி கொள்ளவும், அநேகரை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தவும் முடியும்.

### வேதவசனங்கள்

**ஜெபம்:** தானியேலோவென்றால் ...... தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.
- தானியேல் 6 : 10

**பரிசுத்த வேதாகமம்:** உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்.
- சங்கீதம் 119 : 97

**தேவனோடு ஐக்கியம்:** நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும் படி.... எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.
- I யோவான் 1 : 3

**விசுவாசிகளுடன் ஐக்கியம்:** அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.
- I யோவான் 1 : 7

**சாட்சியாக வாழுதல்:** .... நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி.
- மாற்கு 5 : 19



### 1. ஜெபம் செய்தல்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவரின் அன்றாடக பழக்கம் ஜெபம் செய்தல் ஆகும். உயிர் வாழ்வதற்கு மூச்சுவிடுவது எவ்வளவு அவசியமோ, விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஜெபிப்பதும் அவ்வளவு அவசியமாய் இருக்கிறது.

**'ஜெபம்'**என்றால் 'சாமி கும்பிடுவது' 'ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கடவுளை நினைப்பது','தேவைக்காகத் தெய்வத்தைத் தேடுவது' என்று பொதுவாக நாம் எண்ணுகிறோம். ஆனால் 'ஜெபம்' என்பது மனிதனுக்குத் தெய்வம் அருளியிருக்கும் மகத்தான ஒரு சிலாக்கியமாகவும் அதே நேரத்தில் ஒரு முக்கியமான கட்டளையாகவும் இருக்கிறதென பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம்.

தெய்வத்தைப் பற்றிய பக்தி உணர்வோடு அவரோடு உறவாடக் கூடிய ஒவ்வொரு பரிசுத்தமான எண்ணமும், ஆண்டவரோடு பேசும் ஒவ்வொரு வார்த்தையும், வார்த்தையின் வடிவம் பெறாத ஒவ்வொரு தூய்மையான விருப்பம் கூட ஜெபம் தான்.

சரியான முறையில் ஜெபிக்க நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் அதற்கான அநேக வசனங்கள் உண்டு. 'நீயோ ஜெபம் பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்' *(மத்தேயு 6 : 6)* என்று இயேசு கிறிஸ்து போதித்தார். விசுவாசி தனியாக ஆண்டவரோடு தங்கி இருக்கும் நேரம் ஜெப நேரம்.

ஒவ்வொருநாளும் **அதிகாலையில்** எழுந்தவுடன் சில நிமிடங்களை ஜெபத்தில் செலவிடுங்கள். **முழங்காலில்** நின்று ஜெபிப்பது, தாழ்மையுடன் நாம் தெய்வத்தைத் தேடுவதைக் காண்பிக்கிறது. 'தேவனே உம்மைத் துதிக்கிறேன்' என்று ஜெபத்தில் நீங்கள் ஆண்டவரைத் **துதித்துப் போற்றி,** பக்தியோடு தொழுது கொள்ள வேண்டும். கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். பாவங்களை அறிக்கையிட்டு, **சுத்த இருதயத்தோடு** நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்களைத் தேவன் கேட்கிறார்.

காலையோ, மாலையோ, இரவோ, போகும் போதோ, வரும்போதோ, சாப்பிடும் போதோ, வேலை செய்யும் போதோ, எல்லா நேரங்களிலும், எல்லா நிலைகளிலும் **ஜெபித்துக் கொண்டே இருக்கும் மனப்பக்குவத்தில்** நாம் காணப்பட வேண்டுமென்று பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது.

உற்சாகமாக ஜெபிக்க முடியாத நேரங்களிலும், ஒரு குறிப்பிட்ட ஜெபத்திற்கு பதில் கிடைக்க தாமதிக்கும் போதும் **சோர்ந்து போகாமல்** ஜெபிக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். **காத்திருந்தும், விழித்திருந்தும்** ஜெபிப்பதில் சிறப்பான வெற்றி உண்டு. விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது அற்புதமான பதில்களை நாம் பார்க்க முடியும். ஜெபிக்கும் போது தடைகளும், சோதனைகளும் வரும். **சோதனைகள் மேல் வெற்றிகொண்டு** ஜெபிக்க நீங்கள் பழகவேண்டும்.

**மற்றவர்களுக்காக** ஜெபிப்பது தன்னலமற்ற குணத்தைக் காட்டுகிறது. மற்ற **விசுவாசிகளோடு** சேர்ந்து ஜெபிக்கும் போது நாம் உற்சாகமடைய வாய்ப்புண்டு. நம்முடைய தனிப்பட்ட ஜெப வாழ்க்கையும் வளர்ச்சியுறுகிறது.

நம்முடைய ஒவ்வொரு விண்ணப் பத்தையும் **'இயேசுவின் நாமத்தில்** கேட்டுக்கொள்கிறேன் பரம பிதாவே!' என்று ஏறெடுக்க வேண்டும். இயேசுவின் நாமத்தில் கேட்பது என்றால் ஆண்டவராகிய இயேசுவுக்குப் பிரியமானதைக் கேட்பதென பொருள்படும். **பரிசுத்த ஆவியானவரின் பெலத்தில்** ஜெபம்பண்ணுவது ஒரு ஆழமான அபிஷேகம் நிறைந்த அனுபவமாகும். ஒவ்வொரு விசுவாசிக்கும் இப்படிப்பட்ட ஜெப வாழ்க்கை இருக்க வேண்டும்.

ஒருவன் ஜெபம் பண்ணத் தவறும் போது வாழ்க்கையில் தவறுகிறான். ஜெப வாழ்க்கையில் குறைவுபடும்போது, அனுதின வாழ்க்கையில் குறைவுபடுகிறான். ஜெபத்தில் வெற்றியுள்ள விசுவாசி, வாழ்க்கையில் வல்லமை நிறைந்தவனாக இருக்கிறான். நீங்களும் இப்படியெல்லாம் ஜெபிக்கக் கற்றுக் கொள்வீர்களா? நேரம் எடுத்து ஜெபிக்கும் போதே ஜெப வாழ்க்கை வளர்ச்சியடைகிறது; பெலமடைகிறது. ஜெபம் என்பது நாம் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே யிருக்கும் ஒரு ஆவிக்குரிய பயிற்சியாகும். ஒவ்வொரு நாளும் ஜெபத்திற்கென்று ஒரு சில நிமிடங்களை ஒதுக்கி செலவிடுங்கள்.

## 2. பரிசுத்த வேதாகமம்

பரிசுத்த வேதாகமம் **தேவனுடைய வார்த்தை** என்றழைக்கப்படுகிறது. 66 புத்தகங்கள் அடங்கிய இத்தொகுதியை 35-க்கும் மேலான எழுத்தாளர்கள் சுமார் 1600 வருட காலத்தில் எழுதினார்கள்.இவர்கள் தேவனுடைய ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதினார்கள். பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகத் தேவன் தம்முடைய இருதயத்தையும், மனதையும், சித்தத்தையும் - சுருங்கச் சொன்னால் தம்மையே வெளிப்படுத்தி யிருக்கிறார். இந்த தேவனுடைய வார்த்தையை அல்லாமல் வேறுவிதமாக மனிதன் தேவனை அறிந்து கொள்ள முடியாது. தேவனைக் குறித்த விசுவாசம் (நம்பிக்கை) மனிதனுக்கு ஏற்படவும் முடியாது

விசுவாசம் வளர்ச்சியடைய பரிசுத்த வேதாகமம் தேவை. சரீர வளர்ச்சிக்குச் சத்துள்ள, சரிவிகித உணவு எவ்வளவு அவசியமாயிருக்கிறதோ, அதே வண்ணமாக விசுவாசியின் ஆவிக்குரிய ஆரோக்கி யத்திற்கும், வளர்ச்சிக்கும், ஞான ஆகாரமாகிய வேதவசனத்தின் உபதேசம் அனுதினமும் தேவையாக இருக்கிறது.

புதிதாகப் பிறந்த குழந்தை ஆவலோடு பாலை உட்கொள்கிறது. அதைப்போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு புதிதாகப் பிறந்த விசுவாசியும் வேத வசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையும், நாட்டமும் கொண்டிருக்க வேண்டும்.

உட்கொள்ளும் ஆகாரத்தை நாம் அவசர அவசரமாக விழுங்கி விடுவதில்லை. அதை நன்றாக சமைத்து, ருசித்து, சுவைத்து, நேரம் எடுத்துமென்று உட்கொள்ளுகிறோம். ஒவ்வொருநாளும் வேளாவேளைக்குத் தவறாமல் சாப்பிடுகிறோம். நம்முடைய சீரண மண்டலம் நாம் உட்கொண்ட ஆகாரத்தை சீரணித்து, உட்கிரகித்துக் கொள்கிறது.

(4)

அதைப்போல நாம் பரிசுத்த வேதாகமத்தை மேற்போக்காக வாசிப்பதற்கும் மேலாக,வேத வசனங்களை மீண்டும் மீண்டும் வாசித்து, யோசித்து, தியானிக்க வேண்டும். மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். இப்படி ஆவிக்குரிய சத்தியங் களை ஆத்துமத்தில் உட்கிரகிக்கும் போது தான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை ஊட்டமும், உற்சாகமும், உறுதியும் பெற்று வளர்ச்சியுறுகிறது.

அனுதினமும் அரைமணி நேரமாவது நீங்கள் பரிசுத்த வேதாகமத்துடன் செல விடவேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் வாக்குத்தத்தம், கட்டளை, எச்சரிக்கை, ஜெபம், முன்மாதிரி ஆகிய காரியங்களைப் பார்க்கிறோம்.அனுதினமும் அதிகாலையில் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்பதற்காகப் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டும்.

**நீங்கள் தினமும் வேதத்தை வாசிக்கும் போது...**

1. இன்றைக்கு ஆண்டவர் எனக்குக் கொடுக்கும் **வாக்குத்தத்தம்** என்ன?
2. இன்று நான் பெறும் **கட்டளை** என்ன?
3. எதைக் குறித்து ஆண்டவர் என்னை **எச்சரிக்கிறார்**?
4. **ஜெபம்** பண்ணுவதைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது?
5. வேதாகம பக்தர்களின் **முன்மாதிரி** யிலிருந்து நான் கற்றுக் கொள்வது என்ன?

என்றெல்லாம் ஆராய வேண்டும். வேதாகம வசனத்தோடு உங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அனுதினமும் பரிசுத்த வேதாகமத்தின் வாயிலாக தேவனுடைய சத்தத்தைக் கேட்டுப் பழக வேண்டும். அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறதினால், மிகுந்த பலன் உண்டு.

காலை நேரத்தில் வேதாகமத்தை **வாசித்து தியானிப்பதற்கும்** மேலாக, வேதாகம சத்தியங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காக வசனங்களைப் **படித்து ஆராய** வேண்டும். **மனப்பாடம் பண்ணி** ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். பிரசங்கத்தின் மூலமாகவும், வேதாகம போதனைகள் மூலமாகவும் வசனத்தை அடிக்கடி **கேட்கவேண்டும்.** மற்றவர்களுக்கும் வேதாகமத்திலுள்ள வசனங்களைக் **கற்றுத்தர** வேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். உங்களுடைய வாழ்க்கை தேவனுக்குப் பிரியமுள்ளதாக இருக்க வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்டிருப்பது போல் நீங்கள் வாழவேண்டும்.

## தேவனுடைய வார்த்தையினால் கிடைக்கும் பலன்கள்!

**1. பிதாவின் அன்பு :**

'என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்' என்றார். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்'.- யோவான் 14 : 21, 23

**2.உறுதி:**

உங்கள் வாழ்க்கை தேவனுடைய வார்த்தையாகிய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்படவேண்டும். 'ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப் பட்டிருந்தது' (மத்தேயு 7: 24,25) என்று இயேசு கிறிஸ்து போதித்தார்.

**3.கனிகொடுத்தல்:**

நீங்கள் கர்த்தருடைய வேதத்தின் மேல் பிரியமாயிருந்து, இரவும் பகலும் வேத வசனங்களைத் தியானித்தால் நிறைவையும், மகிழ்ச்சியையும், ஆசீர்வாதத்தையும் பெற்றவர்களாய் இருப்பீர்கள். உங்களுடைய வாழ்க்கை ஆற்றங்கரையிலே நடப்பட்டு, எப்பொழுதும் இலையுதிராமல் தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கிற மரத்தைப் போல செழிப்புள்ளதாய் இருக்கும். உங்கள் செயல்களிலெல்லாம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.(விளக்கம்) சங்கீதம் 1:2,3

**4. வளர்ச்சி:**

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். - I பேதுரு 2:3

**5. பரிசுத்தம்:**

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.
- சங்கீதம் 119 : 11

*ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே* ***பெருகுவீர்களாக.***
*கொலோசெயர் 2: 6, 7*

### 3. ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுதல்

**'ஐக்கியம்'** என்ற வார்த்தைக்கு **'நெருங்கிய ஆவிக்குரிய நட்புறவு'** என்று பொருள். எவரேனும் இருவர் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையை 'ஐக்கியம்' என்று குறிப்பிடுவதுண்டு. ஆரம்பத்தில் ஆதாமின் பாவத்தினாலே மனிதன் எதை இழந்தானோ அதை இயேசு கிறிஸ்து சிலுவை மரத்திலே தாம் சம்பாதித்த இரட்சிப்பின் மூலம் திரும்பவும் ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ளுகிறான். அப்படி கிடைக்கப் பெற்ற ஆசீர்வாதங்களில் ஒன்று தெய்வத்தோடு நாம் கொள்ளும் ஐக்கியமாகும்.

கடவுளை விட்டு தூரமாய், துன்மார்க்கராய், கடவுளுக்கு சத்துருக்களாய் வாழும் மனிதருடைய இருதயம், யாரும் குடியிராத பாழடைந்த வீட்டைப் போலிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது, தேவனுடைய ஆவியானவர் அவர்கள் இருதயத்தில் வாசம் செய்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக ஒரு விசுவாசி ஆண்டவரிடம் நெருங்கி, அவரோடு கூட உறவு கொள்ளும் சிலாக்கியத்தைப் பெறுகிறான்.

ஆண்டவரோடு கொண்டிருக்கும் இந்த ஆன்மீக உறவில் ஆழமாகக் கடந்து செல்வதற்கு, ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது மிகவும் அவசியமாயிருக்கிறது . நமது வேலைகளுக்கும், தனிப்பட்ட தேவைகளுக்கும் மற்றும் பொழுது போக்கிற்காகவும் நேரத்தை ஒதுக்குவதுபோல, ஆண்டவருடன் செலவிடுவதற்குக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும்.

ஆண்டவருடன் நேரம் செலவிடும் போது தான், நாம் அவரை அதிகமாக அறிந்து கொள்ள முடியும். ஒருநாளின் ஆரம்பத்தில் எந்த வேலையைச் செய்வதற்கு முன்பாகவும், யாவரோடும் பேசுவதற்கு முன்பாகவும், அரைமணி நேரமாவது ஆண்டவருடன் செலவிடுவது ஒரு நாளை ஆரம்பிப்பதற்கு சரியான ஆயத்தமாய் இருக்கிறது.

இந்தப் பழக்கத்தை ஒழுங்காகத் தவறாமல் கடைப்பிடிக்கும்போது நீங்கள் ஆன்மீக வளர்ச்சியில் சீராகவும், கிரமமாகவும், முன்னேற முடியும்.

**'நான் என் ஆண்டவரின் அருகில் இருக்கிறேன்; என் ஆண்டவரும், இரட்சகருமான தேவன் எப்பொழுதும் என்னோடு கூட இருக்கிறார்!'** என்ற உணர்வும் அனுபவமும் ஒப்பற்றதொன்றாகும். **'எப்பொழுதும் ஆண்டவரோடு கூட நான் இருக்க வேண்டும்'** என்ற மேலான வாஞ்சை உங்களுக்கு இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் எப்பொழுதும் ஆண்டவரையே நினைத்துக் கொண்டிருப்பதை **தேவ சமூகப் பழக்கம்** என்று அழைப்பார்கள். பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழவும், எந்த சூழ்நிலையையும் திடமனதுடன் சந்திக்கவும் இந்த தேவ சமூக பழக்கம் நம்மை பக்குவப்படுத்துகிறது.

அவர் நம்மோடுகூட இருக்கும்போது யாராலும் கொடுக்கமுடியாத நிலையான மகிழ்ச்சியினாலும், ஆத்மீக சாந்தியினாலும் நாம் நிறைந்திருக்க முடியும். அவருடைய **பிரசன்னத்தில்** தெய்வீக பாதுகாப்பும், அற்புதமான நிறைவும் உண்டு. வேதாகம பக்தர்களான ஏனோக்கு, ஆபிரகாம், மோசே, அப்போஸ்தலனாகிய பவுல் என்பவர்கள் எப்படி தேவனோடு ஆழ்ந்த ஐக்கியம் கொண்டவர்களாக வாழ்ந்தனர் என வேதாகமத்தில் படிக்கிறோம்.

ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கும் பழக்கம் உங்களுக்கு இருக்க வேண்டும். ஒவ்வொருநாளும் ஆண்டவர் உங்களுடன் பேச விரும்புகிறார். நீங்கள் அமர்ந்திருந்து கவனித்துக் கேட்பீர்கள் என்றால் அவருடைய சத்தத்தைக் கேட்க முடியும்.

**‘அவருக்குள் நிலைத்திருக்கிறே னென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்’** *(I யோவான் 2:6)* நமக்குள்ளே வாழ, நம்மை ஆண்டு நடத்த, ஆண்டவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் எதை யோசித்தாலும், பேசினாலும், செய்தாலும் ஆண்டவராகிய இயேசுவுக்குப் பிரியமானதா அவர் அதை அங்கீகரிப்பாரா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காரியம் அவருக்குப் பிடிக்காது என்ற சந்தேகம் தோன்றினாலே அதை வெறுத்து விட்டுவிட வேண்டும். ஆண்டவர் உங்களுடைய வாழ்க்கையில் உள்ள குறைகளைச் சுட்டிக் காண்பிக்கும் போது, அதை உடனே விட்டுவிட வேண்டும். கர்த்தருடைய கட்டளைகளுக்கு உடனடியாகவும், முழுமையாகவும் கீழ்ப்படியும் போதே நிலையான சந்தோஷத்துடன் வாழ முடியும்.

துணிந்து பாவம் செய்து, உள்ளத்தில் வாசம் செய்யும் தேவனுடைய ஆவியான வரைத் துக்கப்படுத்திவிடக் கூடாது. இப்படி பரிசுத்தத்திற்குரிய கவனத்துடன் வாழ்வீர்களானால், கர்த்தரோடு கொள்ளும் ஐக்கியத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும்; வளர முடியும்.

- தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்*!*
- ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ள நேரம் செலவிடுங்கள். ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கும் பழக்கம் உங்களுக்கு இருக்க வேண்டும்*!*
- எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுங்கள்*!*
- ஆண்டவர்மீது கொண்டிருக்கும் அன்பு தணிகிறதா*?* ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய வைராக்கியம் குறைந்து போகிறதா*?* உள்ளம் கடினப்படுகிறதா*?* என்று அடிக்கடி ஆராய்ந்து பார்க்க வேண்டும்*!*

திருச்சபை வரலாற்றில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் தேவனோடு ஐக்கியமாக வாழ்ந்ததைக் குறித்துப் படியுங்கள்*!*

### 4. விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுதல்

**‘தேவன் மனிதனைப் படைத்த போது அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல’** என்று கூறி அவனுக்கு ஒரு ஏற்ற துணையை ஏற்படுத்தினார். ஆண்டவரை ஏற்றுக்கொண்ட, புதிய சிருஷ்டியாகிய விசுவாசியும் உற்சாக மடைவதற்கும், உறுதி அடைவதற்கும் ஆண்டவர் விசுவாசிகளின் ஐக்கியத்தை கிருபையாக கொடுத்திருக்கிறார்.

ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசிகளோடு தொடர்பும், ஆவிக்குரிய நட்பும் வைத்துக் கொள்ளுதல் அவசியம். ஒரு விசுவாசி தனியாக வளரும்போது தெரியாமையினாலும், சோர்வினாலும் பாதிக்கப்பட அதிக வாய்ப்புண்டு. ஆனால் மற்ற விசுவாசிகளோடு அவ்வப்போது தொடர்பு கொண்டு ஐக்கியங்கொள்ளும் போது அநேக சத்தியங்களைத் தெரிந்து கொள்ளவும், விசுவாசத்தில் உறுதி அடையவும் முடியும். இதில் சரியான தெரிந்தெடுப்பு அவசியம். வேதாகம வெளிச்சத்தில், ஆவிக்குரிய அனலோடு வாழும் விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுதல் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பெரும் அளவிற்கு உதவும்.

மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும்; வேதாகமத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். **‘இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன்’** *(மத்தேயு 18:19)* என்று ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். விசுவாசிகள் ஒரு மனப்பட்டவர்களாய் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தேடும் போதும், கூடி வரும்போதும் தெய்வீக ஆசீர்வாதங்களை நிறைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆராதனையிலும், ஐக்கியக் கூட்டங்களிலும், ஊழியத்திலும் விசுவாசி தவறாமல் பங்கெடுக்க வேண்டும்.

**‘சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்! நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்’** *(எபிரெயர் 10:25)* என்ற வேத வசனம், விசுவாசிகளின் கூடி வருதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. **‘ஐக்கியம்’** என்ற வார்த்தைக்கு மற்றொரு பொருள் **‘பகிர்ந்து கொள்ளுதல்’** என்பதாகும்.

நம்முடைய நேரத்தையும், தாலந்து களையும், பொருட்களையும், நமக்குரியவை களையும் சக விசுவாசிகளோடு பகிர்ந்து கொள்வதிலேயே ஐக்கியத்தின் ஆசீர்வாதம் இருக்கிறது.

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலன் உண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கி விடத் துணையில்லையே.

*- பிரசங்கி 4 : 9, 10*

இயேசு கிறிஸ்துவின் காலத்திற்குப் பின் வாழ்ந்த ஆரம்ப கால விசுவாசிகள், ஐக்கியத்தில் உறுதியாய் தரித்திருந்ததே அவர்களுடைய வல்லமையான சாட்சிக்கு அடிப்படையாயிருந்தது. *(அப்போஸ்தலர் 2 : 44- 47)* வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

---

உங்களுடைய ஆவிக்குரிய தேவைகளில் உங்களை உற்சாகப்படுத்தி அறிவுரை கொடுக்கக்கூடிய விசுவாச நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா?

ஒருசில நாட்களுக்கு ஒருமுறையாவது கர்த்தருக்குள் உறுதியாக, உற்சாகமாக இருக்கும் விசுவாசிகளுடன் சேர்ந்து ஜெபிக்கிறீர்களா?

*(8)*

## 5. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழுதல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் அவரைப்போல வாழ வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இதைத் தான் **‘இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழுதல்’** என அழைக்கிறோம்.

ஆண்டவரைப் பிரியப்படுத்தும் வகையில் வாழ்ந்தால் தான் மற்றவர்கள் இயேசுவின் சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும், மற்ற தெய்வீகத் தன்மைகளையும் நம்முடைய வாழ்க்கையில் பார்க்க முடியும்.

உங்களுடைய பேச்சும், நடை உடை பாவனையும், வாழும் முறையும், ஒவ்வொரு செய்கையும் நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்று எல்லோருக்கும் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும். வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும் மற்றும் எல்லா இடங்களிலும் நீங்கள் இப்படிப்பட்ட சாட்சிகளாக வாழ வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்.

ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி **மற்றவர் களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.** அவரைப் போல வாழ்ந்தால் மட்டும் போதாது. அவரைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும் என்று ஆண்டவர் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறிந்திருக்கும் உங்களுக்கு அவரைப் பற்றி அறிவிக்கும் பொறுப்பு கட்டளையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆண்டவரிடமிருந்து நீங்கள் பெற்று அனுபவித்திருக்கும் ஆசீர்வாதங்களை, மற்றவர்களிடம் எடுத்துச் சொல்லும்போது தான் அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகும்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வாயினால் அறிக்கை பண்ண வேண்டும்** என்பது பரிசுத்த வேதாகமத்தின் போதனையாய் இருக்கிறது. **அறிக்கை பண்ணுதல்** என்றால் **'இயேசுவே,என் இரட்சகரும் ஆண்டவருமாய் இருக்கிறார்'** என்று பகிரங்கமாய் எல்லோருக்கும் தெரிவிப்பது என்று பொருளாகும்.

அப்படி தெரிவிப்பது மட்டுமல்ல, மற்றவர்களும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் அவர்களை அழைக்க வேண்டும். இயேசுவுக்குச் சாட்சியாக வாழும் போது ஏற்படும் நிந்தை, எதிர்ப்பு, பரிகாசங்களை அன்பு, சாந்தம், பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளைப் பற்றியும் வெட்கப்படாமல் தைரியத்துடன் அவரை அறியாதவர்களிடமும், அவரை விசுவாசிக்கிறவர்கள் மத்தியிலும் நீங்கள் சாட்சியாக சொல்லும்போது உங்களுடைய விசுவாசம் உற்சாகமடைகிறது; உறுதியடைகிறது.

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பரிசுத்தமாக இருந்தால் தான் ஆண்டவரைப் பற்றி சாட்சி கூறுவதற்கு, உங்களுக்கு தைரியம் உண்டாகும். நீங்கள் அனுதினமும் பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டால் மட்டுமே இயேசு கிறிஸ்துவைப் பற்றி சரியான முறையில் வல்லமையாக சாட்சி பகர முடியும்.

அனனியா பவுலிடம்: நீ கண்டவை களையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக... இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியா யிருப்பாய்.
அப்போஸ்தலர் 22 : 15

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் இயேசு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லலாம். அவர் உங்கள் ஜெபங்களுக்குக் கொடுத்த பதில்களை எடுத்துச் சொல்லலாம். கிறிஸ்தவ கைப்பிரதிகளை, புத்தகங்களைக் கொடுக்கலாம். புதிய ஏற்பாடு, சங்கீதப்புத்தகம், நீதிமொழிகள் போன்ற வேதாகமப் பகுதிகளை அன்பளிப்பாகக் கொடுக்கலாம்.

ஆண்டவர் உங்களை இரட்சித்த கிருபையை விளக்கமாக, சாட்சியாக எடுத்துச் சொல்லலாம். சுவிசேஷ ஊழியம் செய்யும் ஜெபக்குழு, சபை விசுவாசிகள் அல்லது நற்செய்தி ஸ்தாபனத்தாரோடு சேர்ந்து ஊழியங்களுக்குச் செல்லலாம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலுக்குப்பின், பரமேறுவதற்கு முன் கூறின கடைசி வார்த்தைகள்:

'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது... நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளா யிருப்பீர்கள்!' – அப்போஸ்தலர் 1 : 8

## நீங்கள் வளருகிறீர்களா?

'நீதிமான் பனையைப்போல் செழித்து; லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்' சங்கீதம் 92 : 12

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பாவமன்னிப்பின் நிச்சயத்தில் வளரும் அனுபவம் ஒருவேளை உங்களுக்கு இருக்கலாம். **ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்; தொடர்ந்து வளர வேண்டும்** என்ற வாஞ்சை உங்களுக்கு இருக்க வேண்டும்.

நீங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி அடைவதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? என்ன செய்ய விரும்புகிறீர்கள்? உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை நீங்களே பரிசீலனை பண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பயனுள்ளவைகள், தடைபண்ணுகிறவைகள் யாவை? என அறிந்திருக்கிறீர்களா?

இச்சிறு கட்டுரையில் நீங்கள் அடிக்கடி வாசித்து தியானியுங்கள். இதில் கொடுக்கப்பட்டிருப்பவைகள் சிறுகுறிப்புகள் போலத் தோன்றினாலும் உங்கள் எண்ணங்களைத் தெளிவு படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

## உங்கள் கவனத்திற்கு!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் சபை ஆராதனையில் கலந்துகொள்ளுங்கள். ஆராதனை நேரத்திற்கு முன்பாகவே ஆலயத்திற்குச் செல்லுங்கள். ஆராதனை முடிந்த பின்னர் விசுவாசிகளைச் சந்தித்து உரையாடி ஆவிக்குரிய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். சபைப் போதகரைச் சந்தித்துப் பேசுங்கள்.

சபையின் சிறப்புக் கூட்டங்கள், உபவாசக் கூட்டங்கள், வேத ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் தவறாமல் பங்கு பெறுங்கள். உங்கள் வீட்டில் ஜெபக்கூட்டங்களை ஒழுங்கு செய்யுங்கள். நீங்கள் வாழும் பகுதியில் உள்ள விசுவாசிகளைச் சந்தித்து ஜெபியுங்கள்.

உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை அனல் குறைவாகத் தென்பட்டால் காத்திருந்து ஜெபியுங்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் உங்களை விட ஆழமாகவும், உறுதியாகவும் இருக்கிற விசுவாசி மற்றும் ஊழியக்காரர் கண்காணிப்பில் நீங்கள் இருந்து உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவானவைகளை சரிப்படுத்துங்கள். கர்த்தருக்காக உற்சாகமாகக் கொடுங்கள்.



Dr. Selwyn, Gandhi Nagar East, Oddanchatram -624 6219. Phone 89030 11350 Email. selwynde@gmail.com

**இயேசுகிறிஸ்துவை** விசுவாசித்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டிய பல கட்டளைகள் உண்டு. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதும் அப்படிப்பட்ட கட்டளைகளில் ஒன்றாகும். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்கள், தாங்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்று தெரிவிக்கிறார்கள். உள்ளான ஆவிக்குரிய அனுபவத்தை விளக்கும் இந்த வெளிப் படையான அடையாளச் செய்கையின் மூலமாக நாம் ஆண்டவரைப் பிரியப்படுத்துகிறோம். ஞானஸ்நானத்தைப் பற்றிய சில அடிப்படையான கேள்விகளுக்கு எளிய முறையில் இக்கட்டுரையில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

**நீங்கள் ஞானஸ்நானம் எடுத்திருக்கிறீர்களா?**

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் அதன் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.




**உள்ளடக்கம்** ?


1. விசுவாசித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்
2. ஞானஸ்நானம் யார் எடுக்க வேண்டும்?
3. ஞானஸ்நானம் என்றால் என்ன?
4. ஞானஸ்நானம் என்பது எதைக் காட்டுகிறது?
5. ஞானஸ்நானம் என்ற அடையாளச் செய்கை.
6. ஞானஸ்நானம் ஏன் எடுக்க வேண்டும்?
7. ஞானஸ்நானம் எப்பொழுது எடுக்க வேண்டும்?
8. ஞானஸ்நானம் எப்படி எடுக்க வேண்டும்?
9. ஞானஸ்நானம் யாரிடத்தில், எங்கே எடுக்க வேண்டும்?
10. நீங்கள் இதுவரை ஞானஸ்நானம் எடுத்திராவிட்டால்....
11. நீங்கள் ஞானஸ்நானம் எடுத்திருந்தால்..
12. ஞானஸ்நானம் எடுத்த பிறகு என்ன செய்ய வேண்டும்?
13. ஞானஸ்நானத்தைப் பற்றிய முக்கியமான வேத வசனங்கள்




**1. விசுவாசித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படான். கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனா யிருக்கிறான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எல்லா மக்களுக்கும் அருளும் இரட்சிப்பாகிய கிருபை '**சுவிசேஷம்**' என்று அழைக்கப்படுகிறது.**சுவிசேஷம்** என்றால் நல்ல செய்தி என்று பொருள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனுக்குப் பாவமன்னிப்பை அருளுகிறார். பாவத்திற்குரிய பயங்கரமான நரக ஆக்கினை யிலிருந்து (குண்டணை) அவனைக் காப்பாற்றுகிறார். முடிவில்லாத அருள் நிறைந்த நித்திய ஜீவனை மனிதனுக்குக் கொடுக்கிறார் என்பதுதான் அந்த நற்செய்தி.

**இரட்சிப்பின் சத்தியமாகிய** இந்த நற்செய்தியை மனப்பூர்வமாக நம்பி, அதைத் தனிப்பட்ட விதத்தில் அனுபவிப்பது தான் '**இரட்சிப்பின் அனுபவம்**' என்று சொல்லப்படுகிறது. பாவத்தைக் குறித்து மன வருத்தம் அடையும் ஒருவர் 'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக எனக்குப் பதிலாக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தார்' என்று மனப்பூர்வமாக நம்பவேண்டும்.

**ஆண்டவராகிய இயேசு** கிறிஸ்துவிடம் பாவத்திற்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு வாழ்க்கையை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். பழையவழிபாட்டு முறைகளையும் பாவப்பழக்க வழக்கங்களையும் விட்டுவிட தீர்மானிக்க வேண்டும். இப்படி ஒருவர் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக்கப்படும் போது அவருக்குப் பாவ மன்னிப்பின் நிச்சயம் கிடைக்கிறது.

**'இன்றைக்கு நான்** மரித்தாலும் மோட்சத்திற்கு செல்வேன், என் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது' என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா? இப்படிப்பட்ட அனுபவமும் நிச்சயமும் உடையவர்களே ஞானஸ்நானம் பெற வேண்டும்.



## 2. ஞானஸ்நானம் யார் எடுக்க வேண்டும்?

மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் '**விசுவாசிகள்**' என்று அழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு விசுவாசிக்கும் தான் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் அனுபவத்தைப் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். இரட்சிப்பின் அனுபவத்தைத் தொடர்ந்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் இந்த புதிய வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒவ்வொரு விசுவாசியும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### மனந்திரும்புதல்

**மனந்திரும்புதல்** என்ற அனுபவத்தோடு தான் கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பமாகிறது. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருப்பதினாலோ, கிறிஸ்தவப் பெயரை வைத்திருப்பதினாலோ,ஒருவர் உண்மைக் கிறிஸ்தவராகிவிட முடியாது. ஒருவர் கிறிஸ்தவத்தின் மீது நாட்டம் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவக் கொள்கைகளைக் கடைப் பிடிக்கலாம். அது நல்லது தான். ஆனால் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை 'மனந்திரும்புதல்' என்ற அனுபவத்தில் தான் ஆரம்பமாகிறது.



இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருமே மனந்திரும்ப வேண்டிய அவசியம் உண்டு. பாவத்தை விட்டு பரிசுத்த தேவனுக்கு நேராக நம் வாழ்க்கை திரும்புவதே 'மனந்திரும்புதல்' எனப்படும். மனந்திரும்புங்கள் என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் **100** முறை களுக்கும் மேலாக வருகிறது.

**ஆண்டவராகிய இயேசு** கிறிஸ்து, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்று பிரசங்கித்தார். மனந்திரும்புதல் என்ற வார்த்தை ஆழமான துக்கத்தையும், அன்பும், பரிசுத்தமும் நிறைந்த தெய்வத்திற்கு விரோதமாக பாவம் செய்து விட்டோமே என்ற ஒரு உண்மையான மனவருத்தத்தையும், உள்ளம் உடைதலையும் குறிக்கிறது. மனந்திரும்புதல் என்பது ஓர் உணர்ச்சி வசப்படும் அனுபவம் மட்டும் அல்ல.

**இது மனதில்** ஏற்படும் ஒரு மாற்றம் ஆகும். மனந்திரும்புகின்ற ஒருவன் பரிசுத்த வேதாகமத்தின் சத்தியங்களைச் சரியான முறையில் தெரிந்து கொள்வதற்கான ஒரு புதிய தெளிவைப் பெறுகிறான்.

பின் தொடர்பணி ஒட்டன்சத்திரம் 624619
Phone, 8903011350
Email : selwynde@gmail.com

இந்தப் புதிய தெளிவைப் பெறுகிறவர்கள் பரிசுத்தமாக வாழவேண்டும் என்று உறுதியாகத் தீர்மானிக்கிறார்கள். மனந்திரும்புகிறவர்களுக்கு பாவப்பழக்கங்களிலிருந்து ஆண்டவரின் வல்லமையால் விடுதலை கிடைக்கிறது.

**3. ஞானஸ்நானம் என்றால் என்ன?**

**கிறிஸ்தவ உலகில்** 'ஞானஸ்நானம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஞானஸ்நானம் எடுத்திருக்கிறேன். நீங்கள் ஞானஸ்நானம் எடுத்திருக்கிறீர்களா என்று பல விசுவாசிகள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கலாம். ஞானஸ் நானம் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு என்பது ஒரு அடையாளச் செய்கை ஆகும்.

***2000* ஆண்டுகளுக்கு** முன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானன் என்பவர் மனந்திரும்பின வர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இவர் ஞானஸ்நானம் கொடுத்ததினால் யோவான்**ஸ்நானன்** என்று அழைக்கப்பட்டார். யோவான்**ஸ்நானன்** என்றால் திருமுழுக்கு கொடுப்பவர்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **30** வயதான போது யோர்தான் நதியில் யோவான்ஸ்நானன் என்பவரிடம் ஞானஸ்நானம் பெற்றார்.

மத்தேயு *3 : 1-17*
மாற்கு *1 : 1-12*
லூக்கா *3 : 1-22*
யோவான் *3 : 23 , 4 : 1*

அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பரத்திற்கு ஏறிச்செல்லும் முன்னர் கொடுத்த கடைசிக் கட்டளையில் ஞானஸ்நானம் குறித்த கட்டளையும் அடங்கியுள்ளது.-

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி:** வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. **ஆகையால்,** நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,

**நான் உங்களுக்குக்** கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் . ஆமென். மத்தேயு *28 : 18 - 20*

**கிறிஸ்தவ திருச்சபை தோன்றிய** காலத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரைப் பின்பற்றினவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக அவர்களுக்குச் சாட்சியாக வாழ்ந்தார்கள். அவ்வாறு மக்கள் ஞானஸ்நானம் பெறும்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர், இயேசு கிறிஸ்துவைத் தம் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்ட விசுவாசிகளை தண்ணிரீல் முழுக்கி 'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடைசிக் கட்டளைப்படி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் இவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்' என்று பகிரங்கமாய் அறிவிக்கிறார். இந்த அடையாளச் செயல்தான் 'ஞானஸ்நானம்' என்று அழைக்கப்படுகிறது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவர் ஆண்டவராகிய இயேசுவின் போதனைகளைக் கற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றுவதில் ஞானஸ்நானம் பெறுவது ஒரு முக்கியமான படியாகும்.



## 4. ஞானஸ்நானம் என்ற அடையாளச் செய்கை வெளிப்படுத்தும் கருத்து

**ஞானஸ்நானம்** அல்லது திருமுழுக்கு என்ற வார்த்தையின் பொருளை நீங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

**புதிய ஏற்பாட்டின்** புத்தகங்கள் எழுதப்பட்ட கிரேக்க மொழியில் ஞானஸ் நானம் என்ற வார்த்தைக்கு பேப்டைஸோ,பேப்டிஸ்மோ என்ற வார்த்தைகள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பதம் புதிய ஏற்பாட்டில் சுமார் **80** முறைகள் வருகின்றன. அவைகளில் இரண்டு இடங்களைத் தவிர, மற்ற **78** இடங்களிலும் 'மூழ்குதல்' 'ஆழ்த்துதல்' என்ற பொருள்களிலேயே விளக்கப்படுகின்றது.

**சாயம் ஏற்றுவதற்காக** துணிகளைச் சாயத்தண்ணீரில் மூழ்கவைத்து எடுப்பதையும் இச்சொல்லினால் தான் குறிப்பிட்டார்கள். இந்த அடிப்படையில் கவனிக்கும் போது தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதே சரியான முறை என்பது தெளிவாகும். சில சபைகளில் தலையில் தண்ணீரைத் தெளித்தும், தண்ணீரை ஊற்றியும் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்.

**இப்படி ஞானஸ்நானம்** கொடுத்தால் ஞானஸ்நானத்தின் (திருமுழுக்கின்) ஆவிக்குரிய கருத்து முழுமையாக வெளிப்படாது. தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதே வேதம் காட்டும் சரியான முறையாகும். ஞானஸ்நானம் என்பதற்கு இன்னொரு பதம் திருமுழுக்கு என்பதாகும். எனவேதான் நீங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுதல் வேண்டும்.

**ஞானஸ்நானம்** பெறுகிறவர் தண்ணீரில் மூழ்கும்போது கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டதாகவும், தண்ணீரை விட்டு எழும்போது கிறிஸ்துவுடன் எழுந்திருப்பவராகவும் விசுவாச அறிக்கை செய்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பெற்ற தனிப்பட்ட ஆவிக்குரிய அனுபவத்தையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடனாய் நான் என்றென்றும் வாழ்வேன் என்ற அர்ப்பணிப்பையும் ஞானஸ்நானம் என்ற அடையாளச் செயல் மூலம் அவர் எடுத்துக் காட்டுகிறார். உள்ளான ஆவிக்குரிய அனுபவத்தின் உண்மையை தெரியப்படுத்தும் வெளிப்படையான செயல்தான் ஞானஸ்நானம் ஆகும்.

**மேலும் பிதாவின்** மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

**ஆதலால்** அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம். ரோமர் *6 : 4, 5*

**ஞானஸ்நானத்திலே** அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரி லிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

கொலோசெயர் *2 : 12*

**ஆண்டவராகிய** இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார்; மூன்றாம் நாள் உயிருடன் எழும்பினார். இதை நாம் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து நமக்காக மரித்தார் என்ற உண்மையோடு கூட நாமும் கிறிஸ்துவோடுகூடமரித்தோம் என்ற உண்மையையும் வேதம் போதிக்கிறது.

இதைத்தான் கிறிஸ்துவுடனே
கூடச் சிலுவையில் அறையப்
பட்டேன்; ஆயினும்,
பிழைத்திருக்கிறேன்.
இனி நான் அல்ல,
கிறிஸ்துவே எனக்குள்
பிழைத்திருக்கிறார் என்று
அப்போஸ்தலனாகிய பவுல்
எழுதினார். (கலாத்தியர் 2:20 )
வாசித்துப் பாருங்கள்
(புதிய ஏற்பாட்டில் பக்கம் 259)

நாம் நம்முடைய
பாவங்களுக்காக மரிக்க
முடியாது. கிறிஸ்துதான்
நம்முடைய பாவங்களுக்காக
மரித்தார். பாவத்தை விட்டு,
பாவத்தினால் பாதிக்கப்படாத
படி பிரிந்திருக்க வேண்டும்.
**‘ கிறிஸ்துவோடுகூட நான்
மரித்தேன்‘** என்ற ஆவிக்குரிய
உண்மையை விசுவாசிக்கும்
போது பாவத்திற்கு மரிக்கும்
அனுபவத்தை நாம் பெற
முடிகின்றது.

**இது ஏதோ** ஒரு நாளில்
கிடைத்து, அதோடு முடிந்து
விடும் அனுபவம் அல்ல,
ஒவ்வொரு முறையும் நாம்
பாவம் செய்யத் துாண்டப்
படும்போது கிறிஸ்துவோடு
கூட மரித்தேன் என்ற
உண்மையைப் பற்றிக்
கொள்ளும்போது, பரிசுத்த
வாழ்க்கைக்கான பெலனும்,
பாவத்தின் மீது வெற்றியும்
நமக்குக் கிடைக்கின்றன.
கிறிஸ்துவோடுகூட மரித்தேன்,
கிறிஸ்துவோடுகூட அடக்கம்
பண்ணப்பட்டேன்,
கிறிஸ்துவோடு கூட உயிரோடு
எழும்பினேன் என்ற முக்கியமான
ஆவிக்குரியஉண்மைகளை,
‘ஞானஸ்நானம்’ என்ற
அடையாளச் செய்கையின்
மூலம் வெளிப்படுத்துகிறோம்.
கீழ்க்காணும் வசனங்களை
மனப்பாடம் செய்து கொண்டு
அடிக்கடி யோசித்துப்
பாருங்கள். ரோமர் 6 : 4, 5,
எபேசியர் 2 : 4, 5,
கொலோசெயர் 2 : 12

**தேவனோ இரக்கத்தில்**
ஐசுவரியமுள்ளவராய் நம்மில்
அன்புகூர்ந்த தம்முடைய
மிகுந்த அன்பினாலே,
அக்கிரமங்களில் மரித்தவர்
களாயிருந்த நம்மைக்
கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்
பித்தார்; கிருபையினாலே
இரட்சிக்கப்பட்டீர்கள்.
எபேசியர் 2 : 4, 5

**ஞானஸ்நானம்** என்ற இந்த
அடையாளச் செய்கை நாம்
விசுவாசிக்கும் மேலான
ஆவிக்குரிய உண்மைகளையும்,
ஆழமான கிறிஸ்தவ
அனுபவத்தையும்
வெளிப்படுத்துகிறது. எனவே
நீங்கள் ஞானஸ்நானம் பெறாமல்
இருக்கலாமா? சீக்கிரத்தில்
ஞானஸ்நானம் பெற்றுக்
கொள்ளுங்கள். ஒருவேளை
நீங்கள் ஞானஸ்நானம்
பெற்றவர்களாய் இருந்தால்
மேலே சொல்லப் பட்ட
கருத்துக்களை அடிக்கடி
யோசித்துப்பார்க்க வேண்டும்.

**6. ஞானஸ்நானம் ஏன் எடுக்க வேண்டும்?**

1. அடிப்படையான வேத போதனை
2. கட்டளை
3. உடன்படிக்கை
4. அறிக்கை
5. இயேசுவின் மாதிரி



**ஞானஸ்நானம் ஏன் எடுக்கவேண்டும்?**

**1. அடிப்படையான வேத போதனை:**

**ஞானஸ்நானம்** அல்லது திருமுழுக்கு என்பது புதிய ஏற்பாட்டில் நாம் படிக்கும் ஒரு முக்கியமான உபதேசமாகும். புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் சுவிசேஷங்களில் யோவான் ஸ்நானன் என்பவரைப் பற்றி வாசிக்கின்றோம். இவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்தார். இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினார். இவர் மனந்திரும்புதலைக் குறித்தும் பிரசங்கித்தார். ஞானஸ்நானம் என்பது ஏதோ ஒரு புதிய கொள்கையோ சடங்காச்சாரமோ அல்ல, அது தேவனால் உண்டாயிற்று.



பின் தொடர்பணி/ ஒட்டன்சத்திரம் 624619
Phone , 8903011350
Email.selwynde@gmail. com

**புதிய ஏற்பாட்டின்** 47, 66 ஆம் பக்கங்களிலுள்ள மாற்கு 1 : 4, 11: 30 ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள். மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டின் விசுவாசத்துக்கு அஸ்திபாரமான அடிப்படை போதனையாயிருக்கிறது.

**ஆண்டவராகிய இயேசு** கிறிஸ்து தாமே பாவமற்ற பரிசுத்தராயிருந்தும்,தேவநீதியை நிறைவேற்றுகிறதற்காக யோவான்ஸ்நானனிடத்தில் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஞானஸ்நானம் பெற்ற பின் பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார். இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன் என்ற சத்தத்தின் மூலமாக பிதாவானவர் தம்முடைய குமாரனை மகிமைப்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரமேறிச் செல்லுவதற்கு முன் தம்முடைய சீடர்களிடம் கொடுத்த கடைசிக் கட்டளையை வாசித்துப் பாருங்கள்.

மத்தேயு 28 : 19, 20.

**ஆண்டவராகிய** இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் ஆதிவிசுவாசிகளும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார்கள்அதைக் கேட்டு, மனந்திரும்பி, விசுவாசித்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் அடிக்கடி வாசிக்கிறோம். நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பியிருப்பீர்களானால் ஞானஸ்நானம் பெறுதல் அவசியம். நான் தான் விசுவாசிக்கிறேனே, பின்னர் நான் ஏன் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். ஞானஸ்நானம் என்பது நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் போதனைகளில் அடிப்படையானது என்றும் நாம் அறிய வேண்டும்.

**அப்போஸ்தலர்நடபடிகளின்** புத்தகத்தில் 7அதிகாரங்களில் ஞானஸ்நானம் பற்றி வருவதைக் கவனியுங்கள்.

| அதிகாரம் | வசனங்கள் | பக்கம் |
|---|---|---|
| 2 | 37 -42 | 163 |
| 8 | 12,13, 26-40 | 172- 173 |
| 9 | 18 | 174 |
| 10 | 47,48 | 177 |
| 16 | 33 | 187 |
| 18 | 8 | 189 |
| 22 | 14-16 | 196 |

**ஞானஸ்நானம் ஏன் எடுக்க வேண்டும்?**

**2. நாம் கீழ்ப்படிய வேண்டிய ஒரு கட்டளை**

**மனந்திரும்ப வேண்டும்** என்பது தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாகும். அதைப் போல ஞானஸ்நானம் எடுப்பதும் ஒரு கட்டளையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிருச்சபையின் சரித்திரத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி வல்லமையாக பிரசங்கித்தார். அதைக்கேட்ட மக்கள், இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி,ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அப்பொழுது பரிசுத்த** ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று கூறினார். அப்போஸ்தலர் 2: 38 (புதிய ஏற்பாட்டில் பக்கம் 163)



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் பரமேறிச் செல்லுவதற்கு முன் தம்முடைய சீடர்களுக்கு கூறிய முக்கிய வார்த்தைகளில் ஞானஸ்நானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.
(மத்தேயு 28 : 19, 20 வசனங்கள் புதிய ஏற்பாட்டில் 47 ஆம் பக்கம்)
பின்பு, அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.
(மாற்கு 16 : 15, 16 வசனங்கள் புதிய. ஏற்பாட்டில் 75 ஆம் பக்கம்)

**ஞானஸ்நானம் எடுக்க** வேண்டும் என்ற கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். மனந்திரும்பி, உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிற ஒவ்வொரு வரும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். கீழ்ப்படிதலே புதிய ஆசீர்வாதங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருக்கி றீர்களா?



## ஞானஸ்நானம் ஏன் எடுக்க வேண்டும்?

### 3. உடன்படிக்கை

உடன்படிக்கை என்பது வேதாகமத்திலுள்ள ஒரு முக்கியமான வார்த்தையாகும். இருதரப்பினருக்கிடையே ஒரு பொது நோக்கத்திற்காக ஏற்படக்கூடிய உடன்பாடு அல்லது ஒப்பந்தத்தைப் பற்றி நாம் அறிவோம். இதைப்போல கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே தேவன் செய்திருக்கும் பல உடன்படிக்கைகளைப் பற்றி வேதாகமத்தில் படிக்கிறோம்.

**அதற்கு ஒப்பனையான** ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கை யாயிருந்து, இப்பொழுதும் நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. ஞானஸ்நானம் ஒரு உடன்படிக்கை என்று **1 பேதுரு 3 : 21** இல் வாசிக்கிறோம்.
(புதிய. ஏற்பாட்டில் பக்கம் 320)
ஞானஸ்நானம் என்பது மனிதன் தேவனோடு செய்யும் ஓர் உடன்படிக்கையாகும்.



ஒரு விசுவாசி, நான் என்றென்றும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே பின்பற்றுவேன் என்பதற்கு அடையாளமாக எடுக்கும் ஞானஸ்நானம் **நல்மனச் சாட்சியின்** உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரை சேர்ந்து கொள்ளுவோம் வாருங்கள் என்ற ஒரு தெளிவான அழைப்பை **எரேமியா 50 : 5** இல் வாசிக்கிறோம்.

**ஞானஸ்நானம் எடுப்பது** பற்றிப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு விசுவாசியிடம், ஆண்டவர் ' ஞானஸ்நானம் என்பது நீ என்னுடன் செய்யும் ஒரு உடன்படிக்கை' என்று பேசினார். நான் ஆண்டவராகிய இயேசுவோடு உடன்படிக்கை செய்கிறேன் என்ற உணர்வோடு அவர் ஞானஸ்நானம் எடுத்தார். இந்தக் கீழ்ப்படிதலின் செய்கை மறக்க முடியாத ஓர் அனுபவமாகும் என்று அந்த விசுவாசி சாட்சியிடுகிறார். நீங்கள் இயேசுவுடன் உடன்படிக்கை செய்ய அழைக்கப் படுகிறீர்கள். ஆண்டவரோடு நான் உடன்படிக்கை செய்கிறேன் என்ற உணர்வோடு ஞானஸ்நானம் பெறுவதற்கு நீங்கள் தீர்மானிப்பீர்களா?

**ஞானஸ்நானம் ஏன் எடுக்க வேண்டும்?**

**4. அறிக்கை**

**வெளிப்படையாகக்** காட்டும் சொல் அல்லது செயல் 'அறிக்கை' என்று சொல்லப்படுகிறது. அறிக்கை என்றால் சாட்சி அல்லது சான்று என்று பொருளாகும்.ஞானஸ்நானம் ஓர் அறிக்கை ஆகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் எடுக்கும் போது நான் கிறிஸ்தவன், அதாவது கிறிஸ்துவுக்கு உரியவன், கிறிஸ்துவை உடையவன் என்று தெரிவிக்கிறார்கள்.

**கிறிஸ்துவற்ற** பழைய வாழ்க்கையிலிருந்து ஒருவர் மனந்திரும்பும் போது, கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் ஓர் புதிய வாழ்க்கையை விரும்புகிறார். அவர் ஞானஸ்நானம் பெறும் போது கிறிஸ்துவோடு கூட மரித்தேன், கிறிஸ்துவோடு கூட எழும்பி யிருக்கிறேன் என்ற ஆவிக்குரிய உண்மைகளை ஞானஸ்நானம் என்ற செயலின் மூலம் வெளிப்படுத்துகிறார். கலாத்தியா நாட்டு விசுவாசிகளுக்குப் பவுல் எழுதும் போது 'உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் **'கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே'** என்று எழுதினார்.- **கலாத்தியர் 3: 27.**

1. உண்மைக் கிறிஸ்தவர்கள் இரகசியக் கிறிஸ்தவர்களாகத் தம்மளவில் இருக்கமுடியாது. வாழ்க்கையே கிறிஸ்துவைப் பற்றிய அறிக்கையாக அல்லது சாட்சியாக மாற வேண்டும்.
2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்ற வர்களிடம் சொல்லுவதற்கு வெட்கம் அடையக்கூடாது.
3. கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறேன் என்பதை எடுத்துக்காட்டும் ஞானஸ்நானமாகிய கட்டளைக்கு கீழ்ப்படிவதற்குத் தயக்கம் இருக்கக் கூடாது.

**ஆலயங்களிலோ, சரீரம்** முழுவதும் மூழ்கும் அளவிற்கு தண்ணீர் உள்ள இடத்திலோ ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். கிறிஸ்தவ சபையார் முன்னிலையில் இந்தச் செய்கை இவர் இனி கிறிஸ்தவர், எங்களோடு இணைந்து இருக்கிறவர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கும் போது இவர் கிறிஸ்தவத் திருச்சபையில் இணைந்து இருக்கிறார் என்பதை அது அதிகாரப்பூர்வமாகக் காட்டுகிறது.

## 7. ஞானஸ்நானம் எப்பொழுது எடுக்க வேண்டும்?

**ஆண்டவராகிய இயேசு** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பிய பின்னரே ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று ஏற்கனவே பார்த்தோம் (மாற்கு16:16) கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும்,கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவரல்லாத குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்தாலும், இரட்சிக்கப்பட்டு பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்ற பின்னரே ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

**குழந்தைகளுக்கு** ஞானஸ்நானம் கொடுப்பதற்கான ஆதாரம் பரிசுத்த வேதாகமத்தில் இல்லை. பரிசுத்த வேதாகமம் போதிக்கும் விதத்தில் தான் நாம் நடக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு விவரம் அறியக் கூடிய ஆற்றல் இல்லாததால் அவர்களால் விசுவாசிக்க முடியாது. எனவே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியாது, ஆனால் குழந்தை களைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

**பொதுவாக கிறிஸ்தவ** வளர்ப்பில் வளர்க்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக சிறு குழந்தைகளை ஆலயத்திற்கு எடுத்துச்சென்று சபையார் முன்னிலையில், குழந்தைக்குப் பெயர் கொடுத்து பிரதிஷ்டை செய்கிறார்கள். இதை ஞானஸ்நானம் என்று அழைக்க முடியாது, பிரதிஷ்டை என்றால் தேவன் ஆசீர்வதிப்பதற்காக **'பிரத்தியேகப்படுத்துதல்'** என்பது பொருள். சிலர் விவரம் தெரியும் வயது வந்தவுடன் ஞானஸ்நானம் பெற விரும்பு கிறார்கள். அதுவும் சரியல்ல. ஒருவர் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் விசுவாசித்த பிறகே ஞானஸ்நானம் பெற வேண்டும். ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகமப் போதனைகளை சரிவர கற்றுத் தேர்ந்து ஞானஸ்நானம் எடுப்பதே நல்லது.

**எத்தியோப்பியா** நாட்டைச் சேர்ந்த மந்திரிக்கு பிலிப்பு என்பவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது அந்த மந்திரி இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தடை என்ன என்றான். → இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு அந்த மந்திரி உடனே ஞானஸ்நானம் பெற்றான். (பு.ஏ 173 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தச் சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். அப்போஸ்தலர் 8 : 26-40)

## 8. ஞானஸ்நானம் எப்படி எடுக்க வேண்டும்?

**ஞானஸ்நானம்** என்ற வார்த்தையின் பொருளைக் குறித்து விளக்கும்போது தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதே பரிசுத்த வேதாகமப் போதனையின் சரியான முறை என்று படித்தோம். தண்ணீரில் மூழ்குவது கிறிஸ்துவோடுகூட அடக்கம் பண்ணப்பட்டதற்கும் எழும்புவது கிறிஸ்துவோடு கூட உயிரோடு எழும்பினதற்கும் அடையாளமாக இருக்கிறது என்பதை மீண்டும் நினைவு படுத்துகிறோம்.

**சிலர் இயேசுவின்** நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். அது சரியாகாது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்ற திரியேகத்துவத்தைப் பற்றி வேதாகமம் போதிக்கிறது. நாம் திரியேக தேவனை விசுவாசிக்கிறவர்களானதால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் பெறுதல் வேண்டும்.

**9. ஞானஸ்நானம் யாரிடத்தில், எங்கே எடுக்க வேண்டும்?**

**நான் யாரிடத்தில்** எந்த சபையில் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பலரும் கேட்கிறார்கள். பல சபைப் பிரிவினரும் தங்கள் சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்வதற்காக உங்களைக் கட்டாயப்படுத்தலாம், குழப்பலாம். ஆனால் உங்களது ஆவிக்குரிய நலனில் கரிசனை கொண்டு கண்காணிக்கும் சபை ஊழியரிடம் ஞானஸ்நானம் பெறுவதே சாலச் சிறந்தது. வேதாகம அடிப்படையில் இயங்கும் ஆவிக்குரிய சபையில் ஞானஸ்நானம் பெற்று அச்சபை விசுவாசிகளோடு இணைந்து வளருவது மிகவும் நல்லது. ஞானஸ்நானம் எடுக்கும்போது நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறீர்கள்.

**ஒரே முறை** ஞானஸ்நானம் பெற்றால் போதுமானது. இரட்சிக்கப்பட்ட பின்னர் சரியான முறையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற அவசியமில்லை.

பின் தொடர்பணி/ ஒட்டன்சத்திரம் 624619
Phone , 8903011350
Email.selwynde@gmail. com



**10. நீங்கள் இது வரை ஞானஸ்நானம் எடுத்திராவிட்டால்...**

**இதை வாசிக்கிற** நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட விசுவாசியாக இருக்கலாம். ஞானஸ்நானத்தின் சத்தியத்தை இதுவரை அறியாமல் இருந்திருக்கலாம். அல்லது ஞானஸ்நானத்தின் உபதேசத்தை தவறாகப் புரிந்திருக்கலாம். இந்தக் கட்டுரையில் சொல்லப் பட்டிருக்கும் உண்மைகளைக் கருத்துடன் யோசித்துப் பாருங்கள். திறந்த உள்ளத்தோடு கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க உங்கள் மனதை ஆண்டவருக்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். கீழ்ப்படிதலில் ஆசீர்வாதம் உண்டு. நீங்கள் ஞானஸ்நானம் எடுக்கும் போது உங்களையோ உங்களுக்கு கொடுப்பவரையோ அல்லது சபையையோ பிரியப்படுத்த வில்லை. உங்கள் கீழ்ப்படிதல் மூலமாக ஆண்டவரை நீங்கள் பிரியப்படுத்துகிறீர்கள்.

தயவு செய்து அப்போஸ்தலர் 22:14-16 வசனங்களை கருத்துடன் படித்துப் பார்ப்பீர்களா?
(புதிய ஏற்பாட்டின் பக்கம் 196)

**நீங்கள் ஞானஸ்நானம்** எடுப்பதற்கு ஆண்டவர் வழி நடத்த வேண்டும் என்று காத்திருக்க அவசியம் இல்லை. ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்ற தெளிவான கட்டளையை ஆண்டவர் கொடுத்திருக்கிறார். எங்கே எடுக்க வேண்டும். யாரிடம் எடுக்க வேண்டும் என்று நீங்கள் ஒருவேளை குறிப்பான வழிநடத்துதலுக்காக ஜெபிக்கலாம். ஆவிக்குரிய ஊழியரை அணுகி ஆலோசனை பெற்று தாமதிக்காமல் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதில் ஒரு வேளை சில தடைகள் வரலாம். நன்றாக ஜெபித்து தடைகளைக் கடந்து தாமதிக்காமல் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

**ஒரு கிறிஸ்தவனுடைய** வாழ்க்கையில் ஞானஸ்நானம் என்பது மத நம்பிக்கைக்குரிய வெறுமையான சடங்காச்சார செய்கை அல்ல. அது உண்மையான ஆவிக்குரிய அனுபவத்தை விளக்குகின்ற ஒரு முக்கியமான அடையாளச் செய்கையாகும். விசுவாசத்தில் அடையாளமாக காட்டும் கீழ்ப்படிதலின் செயலாகும். விசுவாசிக்கிறவர்கள், விசுவாசியாதவர்கள் முன்னிலையில் ஞானஸ்நானம் பெறுபவர் நான் ஒரு கிறிஸ்தவனென்று அறிக்கையிடுகிறார்.

**ஆண்டவராகிய இயேசு** கிறிஸ்துவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஞானஸ்நானம் மறக்க முடியாத, மறுபடியும் நினைவிற்கு கொண்டு வர வேண்டிய ஒருகீழ்ப்படிதலின் அனுபவம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஞானஸ்நானம் என்பது ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்று சொல்லலாம்.

## 12. நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால்..

**இந்தப்** புத்தகத்தை வாசிக்கின்ற நீங்கள் ஒருவேளை ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருக்கிறீர்கள். இதைத் தொடர்ந்து கீழ்ப்படிதலின் பாதையில் நீங்கள் முன்னேற வேண்டும். ஞானஸ்நானம் பெறுதல் ஒரு முடிவல்ல. ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் முக்கியமான ஒரு படியாகும். கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து வளர்ச்சி பெறுவதும், முன்னேறுவதும் **'சீஷத்துவம்'** என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் வெறும் விசுவாசிகளாக அல்ல, உண்மையான சீஷர்களாய்ஆண்டவருக்கென்று அதிகமதிகமாய் பயன்பட வேண்டும். சீஷத்துவம் என்பதில் பின்பற்றுதல், கற்றுக்கொள்ளுதல், நிலைத்திருத்தல், பயன்படுதல் என்பவைகளெல்லாம் அடங்கும்.

**நான் ஆண்டவராகிய**
இயேசு கிறிஸ்துவின் சீடன்; நான் ஒவ்வொருநாளும் அவரை நெருக்கமாகப் பின்பற்றுகிறவன் என்ற இதயத்துடிப்போடு நீங்கள் வாழ வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிற உங்கள் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார்.
இது ஒரு அற்புதமான பாக்கியம். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்ற அனுபவத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பரிசுத்த ஆவியானவரின்**
நிறைவைப் பெறுவது அல்லது அவருடைய ஆளுகைக்குள் வருவது என்ற அனுபவம் தனிப்பட்ட குறிப்பிடக் கூடிய ஒரு சிறப்பான அனுபவமாகும். இதைத் தொடர்ந்து ஒவ்வொருநாளும் ஆவியானவரின் நிறைவுக்குள்ளும், கட்டுப்பாட்டிற்குள்ளும் நிலைத்திருக்க வேண்டிய அன்றாடக அர்ப்பணிப்பு தேவை. ஒவ்வொருநாளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுங்கள்.

**பரிசுத்த ஆவியானவர்**
ஏதோ மின்சாரம் அல்லது காற்று போன்ற ஒரு சக்தி அல்ல; அவர் ஆள்தன்மை உடையவர். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது, வல்லமையான ஒரு அனுபவமாகும். இது எல்லா நேரங்களிலும் உணர்ச்சிவசமான அல்லது உணர்ச்சியைச் சார்ந்த அனுபவமாக இருப்பது இல்லை.

**பரிசுத்த ஆவியானவர்**
ஒரு விசுவாசியை நிரப்பும்போது வரங்களைத் தந்தருளுகிறார். பொதுவாக 'பரிசுத்த ஆவியி ன் அபிஷேகம்' என்று சொல்லப் படும் இந்த அனுபவத்தைப் பெறுகிறவர்களுடைய ஜெப வாழ்க்கையில் பெருமளவிற்கான மாற்றங்கள் காணப்படுகின்றன. பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்குள் வாழ்கிறவர்கள் பரிசுத்தமாக வெற்றியுடன் வாழ்வார்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக வல்லமையாகப் பயன்படுவார்கள்.

## ஞானஸ்நானம் 1





Crucified with Him

கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன்


Buried with Him

மரித்தேன் ; கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டேன்


Raised with Him

கிறிஸ்துவுடன் கூட உயிர்த்தெழுந்தேன்

பின் தொடர்பணி ஒட்டன்சத்திரம் 624619
Phone , 8903011350
Email.selwynde@gmail. com

## ஆரம்பம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலக இரட்சகர். அவரை நீங்கள் உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருப்பீர்களானால் நீங்கள் ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறீர்கள்.

இந்த ஆரம்ப அனுபவம்

1. மனந்திரும்புதல்
2. இரட்சிப்பு
3. மறுபடியும் பிறத்தல்
4. இயேசுவை ஏற்றுக்கொள்ளுதல்

என்ற வார்த்தைகளால் விளக்கப் படுகிறது.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என் கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமா னது; அவர்களில் பிரதான பாவி நான். 1 தீமோத்தேயு 1 : 15

ஒருவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்காக, என்னுடைய பாவங்களுக்காக, எனக்குப் பதிலாக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார் என்று விசுவாசிக்கும் போது அவர் இரட்சிக்கப்படுகிறார்.

இரட்சிப்பு என்றால் 'பாவத்திற் குரிய தண்டனையாகிய நரக ஆக் கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலைய ாக்கப் படுகிறார்' என்று பொருள்.

'மனந்திரும்புதல் ' என்றால் மனதில் மாற்றம் என்று பொருள். தேவனுடைய ஆவியானவர் பாவ உணர்வைக் கொடுக்கும் போது, பாவவழிகளை விட்டு, நரகத்தின் திசையை விட்டு முற்றிலுமாக தேவனிடத்திற்கு திரும்புவது மனந்திரும்புதல் ஆகும். இப்படி மனந்திரும்பி, விசுவாசித்து, இரட்சிக்கபபடுகிறவர்கள். ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றி சீஷராக வாழவேண்டும்.

ஆண்டவராகிய இயேசுவை தங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் இவர்கள் 'விசுவாசிகள்' என்று அழைக்கப் படுகிறார்கள்.

நீங்கள் ஒரு விசுவாசியா? உண்மையான கிறிஸ்தவரா? கிறிஸ்தவர் என்றால்

கிறிஸ்துவை + உடையவர்

கிறிஸ்துவிற்கு + உரியவர்

நீங்கள் இரட்சிக்கப்பட்டு, விசுவாசியாக மாறியிருந்தால் அது தேவன் உங்களுக்கு காட்டி யிருக்கும் மாபெரும் கிருபை.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்து வுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டி யாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. II கொரிந்தியர் 5 : 17

இதோடு இந்த அனுபவம் முடிந்து விடுவதில்லை. நீங்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் ஒரு உண்மையான சீஷராக வளர வேண்டும். 'சீஷத்துவம்' என்ற வார்த்தை இந்த புதிய வாழ்க்கை எப்படிப்பட்டது என்று விளக் குகிறது. சீஷத்துவம் ஆவிக்குரிய வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்த புதிய வாழ்க்கைக்கு ஒரு சில ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் உண்டு. இவைகள் சட்ட திட்டங்கள் போல ஒருவரை நெருக்கி, கட்டாயப் படுத்தி, அச்சுறுத்தி செய்ய வைக்கும் வழிமுறைகள் அல்ல. ஒவ்வொரு நிலையிலும் தன்னார்வத்தோடு தெரிந்துகொள்ளும் தீர்மானங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இயேசு அவர்களை நோக்கி: 'என் பின்னே வாருங்கள்', உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மாற்கு 1 : 17

(1)

## சீஷத்துவ அழைப்பு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழிய ஆரம்பத்தில் கலிலேயா கடற்கரையருகே சென்று, அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந் தவர்களோடு அடிக்கடி சந்தித்துப் பேசி, நட்புறவை வளர்த்து அவர்களைத் தன் பின்னே வரும்படி அழைத்தார். அவர்களை பெயர் சொல்லி அழைத்தார். முதலில் இயேசுவின் சீஷர்களாக மாறினவர்கள் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான்.

*மத்தேயு 4 , மாற்கு 1, லூக்கா 5 , யோவான் 1*

*மாற்கு 3 : 13 - 15 புதிய ஏற்பாட்டில் பக்கம் 51*

பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்,

வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடைய வர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்.



சீஷர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு ஒவ்வொரு நாளும் கூடவே சென்று அவரைக் கவனித்து அவருடைய போதனைகளைக் கேட்டு அவரைப்போல் மாறுவதற்கு அழைக்கப்பட்டார்கள்.
இன்றைக்கும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளை ஆண்டவராகிய இயேசு இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு அழைக்கிறார். நீங்கள் ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாக நான் வாழ வேண்டும் என்று என்றைக்காவது யோசித்தது உண்டா? அதை விரும்பியிருக்கிறீர்களா?

## சீஷத்துவம்: நோக்கம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்தபோது அதிகமான நேரம் 12 சீஷர்களோடு செலவழித்தார். செல்லும் இடமெல்லாம் அவர்களைக் கூட்டிச் சென்று, தனிக்கவனம் செலுத்தினார். சுவிசேஷங்களில் **இயேசுவும் சீஷர்களும்** என்ற தலைப்பில் கவனிக்கும்போது சீஷத்துவத்தின் நோக்கம் கீழ்க்காணும் **5 வாக்கியங்களில்** தெளிவாகின்றன.

1. இயேசு கிறிஸ்து சீஷர்களைத் தனித்தனியே,பெயர் சொல்லி அழைத்தார்.
2. சீஷர்கள் தன்னோடு இருக்க வேண்டுமென்று விரும்பினார்.
3. சீஷர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான வித்தியாசமான தன்மைகள், தாலந்துகள்,
திறமைகள் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒருவரிடம் இருந்து ஒருவரும், குழுவாகவும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்.
4. சுவிசேஷத்தை அவர்கள் உலகமெங்கும் அறிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.
5. விசுவாசிகளை சீஷர்களாக உருவாக்கி ஆண்டவராகிய இயேசுவின் சார்பில் அவர் கொடுத்த கட்டளைகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்று பணித்தார்.

**'சீஷன்'** அல்லது **'சீடன்'** என்ற வார்த்தை ஓர் ஆசிரியர் அல்லது ஒரு குருவின் கண்காணிப்பில் கற்றுக் கொள்கிற ஒருவரைக் குறிக்கிறது. ஒரு ஆசிரியரின் கீழ் ஒரு குறிப்பிட்ட வேலையையோ அல்லது ஒரு கலையையோ அவரிடமிருந்து கற்றுக் கொள்கிற வாழ்க்கைக்கு **'சீஷத்துவம்'** என்று பெயர்.

*இந்த தலைப்பில் வேத வசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேதத்தில் எடுத்துப் பார்த்து வாசியுங்கள் அதிகார எண்களை கவனியுங்கள். நீங்கள் அதை நினைவில் வைத்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள் ஒவ்வொரு வசனத்தையும் தியானியுங்கள்.*

| | |
|---|---|
| மாற்கு | **1** : 17 |
| | **2** : 14 |
| | **3** : 13 -15 |
| மத்தேயு | **4** : 19, 20 |
| லூக்கா | **5** : 11 |
| | **6** : 40 |
| மத்தேயு | **7** : 13,14 |
| மாற்கு | **8** : 34 |
| லூக்கா | **9** : 23 |
| மத்தேயு | **10** : 38 |
| | **11** : 29 |
| யோவான் | **12** : 26 |
| | **13** : 34, 35 |
| லூக்கா | **14** : 25-27 |
| யோவான் | **15** : 8 |
| மத்தேயு | **16** : 24 |

**சீஷத்துவம் - முக்கிய அம்சங்கள்**

1. யோவான் **8:31** - நிலைத்திருத்தல்
2. லூக்கா **9:23** - பின்பற்றுதல்
3. மத்தேயு **11:29** - கற்றுக்கொள்ளுதல்
4. யோவான் **13:34, 35** - அன்புகூருதல்
5. யோவான் **15:8** - கனிகொடுத்தல்

*சீஷன் யார்? சீஷன் எப்படிப்பட்டவன்? சீஷன் என்ன செய்ய வேண்டும்?*

**1. சீஷன் வேதாகம உபதேசத்தில் நிலைத்திருக்கிறான்:** இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். யோவான் **8 : 31**

**2. சீஷன் சுயவெறுப்பின் பாதையைத் தெரிந்துகொண்டு ஆண்டவரைப் பின்பற்றுகிறான்:** பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். லூக்கா **9 : 23**

**3. சீஷன் ஆண்டவரிடமிருந்து கற்றுக் கொள்ளுகிறான்:** .... என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். மத்தேயு **11 : 29**

**4. சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருகிறார்கள்:** நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். - யோவான் **13 : 34, 35**

**5. சீஷன் கனி கொடுக்கிறான்:** நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவான் **15 : 8**

பின்தொடர்பணி, ஒட்டன்சத்திரம் 624 619 *PH: 89030 11350 Email. selwynde@gmail. com*

சுயத்தை வெறுத்தலுக்கு ஆதாரமான **5** முக்கியமான வசனங்களின் குறிப்பிடங்கள் **(References)** கீழே தரப்பட்டுள்ளன. இந்த வசனங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அதிகாரங்களின் இலக்கங்களைப் பாருங்கள்- 8, 10, 12, 14, 16 என இரட்டைப் படை எண்களாக இருக்கின்றன. இதில் நடுவில் உள்ள எண் **12**. இது நமக்கு 12 **சீஷர்களை** நினைவுபடுத்துகிறது.

1. மாற்கு **8** : 34
2. மத்தேயு **10** : 38
3. யோவான் **12** : 26
4. லூக்கா **14** : 25 -27
5. மத்தேயு **16** : 24

1. *பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு,என்னைப்பின்பற்றக்கடவன்.* மாற்கு **8** : *34*

2.*தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.* மத்தேயு **10** : *38*

3.*ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்.* யோவான் **12** : *26*

4.*பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப் பார்த்து: யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்* லூக்கா **14** : *25 -27*

5.*அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.* மத்தேயு **16** : *24*

**சீஷத்துவம்: சிந்தித்துப் பாருங்கள்!**

- நீங்கள் வேதவசனத்தை அனுதினமும் தியானிக்கிறீர்களா?
- ஒவ்வொருநாளும் ஆண்டவரிடமிருந்து என்ன கற்றுக்கொள்ளுகிறீர்கள்?
- உங்களுக்கு சுயத்தை வெறுக்கும் அனுபவம் இருக்கிறதா?
- உங்களுடைய குணங்களில் என்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன?
- நீங்கள் மற்ற விசுவாசிகளிடம் அன்பு பாராட்டுகிறீர்களா?
- சீஷத்துவம் என்பதைக் குறித்து என்ன விளங்கியிருக்கிறீர்கள்?
- நீங்கள் சீஷனா? விசுவாசியா?
- விசுவாசி சீஷனாக மாற என்ன செய்ய வேண்டும்?
- சீஷராக்குவது என்றால் என்ன?
- நீங்கள் எப்படி இயேசுவின் சீஷரானீர்கள்?
- நீங்கள் இயேசுவின் சீஷனாக மாறுவதற்கு உதவி செய்தவர்கள் யார்?
- நீங்கள் யாரை சீஷராக்க முயற்சி செய்கிறீர்கள்?
- நீங்கள் கடமைக்காக ஜெபிக்கிறீர்களா?
- கருத்துடன் ஜெபிக்கிறீர்களா?
- ஆவிக்குரிய ஒழுங்குகளில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்கிறதா?
- இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர் களுக்கும் சொல்ல வேண்டும் என்ற தாகம் உங்களுக்கு இருக்கிறதா?
- இயேசுகிறிஸ்துவை நேசிக்கிறவர்களோடு அடிக்கடி சேர்ந்து ஜெபிக்கவும் வேதத்தைக் கற்றுக் கொள்ளவும் உங்கள் ஆவிக்குரிய தேவைகள் பற்றி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா?

## நினைவில் நிறுத்திக் கொள்ள...

அதிகார எண்களைப் பாருங்கள்; புத்தகங்களை கவனியுங்கள். இந்த அதிகாரங்களில் எந்தெந்த வசனத்தில் **சீஷத்துவத்தைப்** பற்றிய கருத்து வருகிறது? என்று கண்டுபிடியுங்கள்.

மாற்கு 1

யோவான் 2

மத்தேயு 3

லூக்கா 5

மாற்கு 6

மாற்கு 8

லூக்கா 9

மத்தேயு 10

மத்தேயு 11

யோவான் 12

யோவான் 13

லூக்கா 14

யோவான் 15

மத்தேயு 16

யோவான் 17

சீஷத்துவம் என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் சீஷன், சீஷர்கள் என்ற வார்த்தைகள் பலமுறை வருகின்றன. யோவான் சுவிசேஷத்திலும், அப்போஸ்தலர் நடபடிகளிலும் பலமுறை வருகின்றன.எங்கெல்லாம் வருகின்றன என்பதைக் கண்டுபிடித்து குறித்துக் கொள்ளுங்கள்.

*சீஷனாய் மாறுவேன் நான்*
*சீஷனாய் மாற்றுவேன் நான்*
*என்னாலே ஒன்றும் இல்லையே*
*உம்மாலே எல்லாம் கூடுமே*

## ஒழுங்குகளையும் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டிய பகுதிகள்

1. ஜெபம் / உபவாசம்
2. வேதவசன தியானம்
3. விசுவாசிகளோடு ஐக்கியம்
4. சாட்சியான வாழ்க்கை
5. எளிமையான வாழக்கை
6. கற்றுக்கொள்ளும் மனப்பான்மை
7. பாவப்பழக்கங்களை விட்டு விடுதல்

பரிசுத்தமான பக்தியுள்ள வாழ்க்கைக்கு தேவையான பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கவும் பயிற்சியும், முயற்சியும் தேவை.

மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

*I கொரிந்தியர் 9 : 27*

**ஆண்டவராகிய இயேசுவும் 12 சீஷர்களும்**



**நான் இயேசுவின் சீஷர்களில் ஒருவனா?**

இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மாற்கு 1 : 17

அவர்கள் நடந்து போகையில், அல்பேயுவின் குமாரனாகிய லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு; எனக்குப் பின் சென்று வா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின் சென்றான். மாற்கு 2 : 14

பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். மாற்கு 3 : 13

அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், மாற்கு 3 : 14

வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்.மாற்கு 3 : 15

என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மத்தேயு 4 : 19

உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். மத்தேயு 4 : 20

அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். லூாக்கா 5 : 11

சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான். லூாக்கா 6 : 40

பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன். மாற்கு 8 : 34

பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். லூாக்கா 9 : 23

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மத்தேயு 10 : 38

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் மத்தேயு 11 : 29

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன், நான் எங்கே இருக்கிறேனே அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். யோவான் 12 : 26

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன்.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரு ம் அறிந்துகொள்வார்கள் என்றார். யோவான் 13 : 34, 35

(6)